# "இந்துத்வா" ஆட்சியா வேண்டும்?

கி. வீரமணி

திராவிடர் கழக வெளியீடு

# "இந்துத்வா" ஆட்சியா வேண்டும்?

கி. வீரமணி

திராவி ர் கழக வெளியீடு
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை - 600 007

முதற் பதிப்பு – 1999

© பதிப்புரிமை பெற்றது

நன்கொடை (குறைந்த அளவு) ரூ. **8/–**

அச்சுக் கோப்பு
பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம்

அச்சிட்டோர்
'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்
பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை –600 007

# உச்சநீதிமன்ற ஆணையை நிறைவேற்றவேண்டும்!

புதுவையில் 26.6.99 அன்று திராவிடர் கழகத்தின் சார்பில் நடை பெற்ற மதவாத கண்டன மாநாட்டில் திராவிடர் கழகப் பொதுச்செயலா ளர் தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

## பேசிக் கொண்டே போகலாம்

இந்த மதவாதத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் நாங்கள் மணிக்கணக்காகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். எல்லோரும் கூட சேர வேண்டியதில்லை. அருமைச் சகோதரர் மாண்புமிகு அமைச்சர் திருவிசு வநாதன் அவர்கள் ஆனாலும், அதேபோல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய செயலாளர் அவர்கள் ஆனாலும் அதேபோல இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக்கழக மாவட்ட செயலாளர்களானாலும், ஜனதா தளத்தினு டைய தலைவரானாலும் மற்ற நம்முடைய பேரவைக் கட்சி நண்பர்க ளானாலும் அல்லது இங்கு வந்திருந்தும் பேச வாய்ப்பில்லாமல் அமர்ந்திருக்கும் நண்பர்களானாலும் விரிவாகப் பேசிக் கொண்டே போகலாம்.

## ஆண்டது குறுகிய காலம் செய்திகளோ அதிகம்!

ஏனென்றால் ஆண்டது குறுகிய காலம். ஆனால், அவர்களைப்பற்றி பேசுவதற்கு அவர்கள் விட்டுச் சென்றது நீண்ட செய்திகள். அதைத் தான் நினைத்துப் பார்க்க வேண்டும். எனவே, அதை நிறையச் சொல்லலாம். ஆனால், அதையெல்லாம் விரிவாகச் சொல்லிக்கொண்டி ருக்க வாய்ப்பில்லை என்பதால்தான் நண்பர்களே, நீங்கள் இங்கு கேட்பதால் மட்டுமல்ல இல்லத்திற்குச் சென்றும் படிக்க வேண்டும் என்பதற்காக ஆதாரத்துடன் நூல்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். அதை வாங்கி நீங்கள் பயன்பெற வேண்டும். ஏனென்றால் இது எதிர்கால வாழ்வைப் பொறுத்தது.

## கொள்ளிக்கட்டையை- எடுத்துச் சொறிந்துகொண்டவர்கள்

இது விளையாட்டல்ல. கொள்ளிக்கட்டையை எடுத்து தலையில் சொறிந்து கொண்ட பகுத்தறிவாளர்கள் என்று தங்களைத் தம்பட்டம்

அடித்துக்கொண்ட நம்முடைய சகோதரர்கள் பி.ஜே.பி.க்கு வக்காலத்து வாங்க இப்பொழுது முன் வந்திருக்கிறார்கள். கேட்டால் அது கொள்ளிக்கட்டையல்ல; அது ஜ்வொலையோடு ஒளி வீசுகின்ற ஒரு புரட்சிச் சின்னம் என்று சொல்லுகிறார்கள். அதுதான் விளக்கம். ஏனென்றால் அவர்கள் செயலில் வல்லவர்கள் அதைதான் இங்கு பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது கொள்ளிக்கட்டை ஆயிற்றே - அது சுடுகிறதே என்று சொன்னால் எங்களுக்குத் தணல்போல் இல்லை; தண்நிலவு போல் இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். பரிதாபத்திற்குரியவர்கள். அவர்கள் அனுதாபத்திற்குரியவர்கள்.

## உண்மைகள் தெரியவேண்டும்

தற்பொழுதைய தேர்தல் முடிந்தவுடன் நம்முடைய ஆறுதலுக்கும், தேற்றுதலுக்கும் உரியவர்கள் (சிரிப்பு). தந்தை பெரியார் அவர்களுடைய இயக்கம் நீண்ட காலமாக புத்தகத்தைப் போட்டுப் பரப்புகின்ற இயக்கம். இது வியாபாரத்திற்காக செய்யப்படுகின்ற காரியமல்ல. இதனுடைய விலையைப் பார்த்தாலே தெரிந்துகொள்ளலாம். அடக்க விலைக்கும் குறைவான வெளியே போடப்பட்டிருக்கும். காரணம் என்னவென்று சொன்னால் மக்களுக்கு உண்மைகள் சென்றடைய வேண்டும்.

## வதந்திகள் வேகமாகப் பரவும்

நம்முடைய நாட்டிலே வதந்திகள் சுலபமாகப் பரவும், நோய் பரவுவதைப்போல, நோய்க் கிருமிகள் பரவுவதைப் போல சிகிச்சைகள் கொடுப்பது என்பது அவ்வளவு வேகமாக நடக்காது.

## சிகிச்சை அளிக்க வேண்டும்!

ஒரு நோயாளியை டாக்டர் பரிசோதிக்கின்றார். நாடியைப் பார்க்கின்றார். நோயாளிக்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டிய பணி டாக்டர்களிடம் உள்ளது. அது மாதிரி நமது சமுதாயத்தின் நிலை இருக்கிறது. ஆகவேதான் பெரியார் இயக்க நூல்களை இலாப நோக்கத்துடன் போடாமல் கொண்டு வந்திருக்கின்றோம். புத்தகங்கள் மட்டுமல்ல; ஒலி நாடாக்களையும் நீங்கள் வாங்கிக் கேட்க வேண்டும்.

## தி.மு.க. சொன்னதைத்தான் நினைவூட்டுகின்றோம்

இந்துத்துவாவில் கரைந்த தி.மு.க. என்ற புத்தகத்தை நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம். அதில் எங்களுடைய கருத்து எதுவுமே கிடையாது. அந்தப் புத்தகத்தை நீங்கள் வாங்கிப் படிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு ஆண்டுக்கு முன்னாலே என்ன சொன்னார்களோ அதை அவர்களுக்கும், வாக்காளர்களுக்கும் சேர்த்து நினைவூட்டுகின்றோம் (சிரிப்பு, கைதட்டல்). ஏனென்றால் ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. பொதுமக்களுக்கு ஞாபக மறதி அதிகம் என்பது அந்தப் பழமொழி.

அதுவும் நம்முடைய நாட்டு மக்களுக்கு இன்னும் மறதி அதிகம். நல்ல நிலையில் இருக்கும்பொழுதே மறதி அதிகம். கொஞ்சம் தடுமாற்ற மான நிலையில் இருந்தால் அறவே மறதி அதிகம். முக்கியமாக தலைவர்களுக்கே மறதி ஏற்பட்டுவிடுகின்றது. நேற்று நாம் என்ன பேசினோம் என்று. ஆகவே அவர்களுக்கேக்கூட நினைவூட்ட வேண் டும் என்பதற்காகத்தான் அந்த புத்தகத்தைப் போட்டிருக்கின்றோம். அதை நீங்கள் வாங்க வேண்டும். படிக்க வேண்டும்.

## உறவுக்காரன்

அதுபோல பதின்மூன்று மாத பி.ஜே.பி. ஆட்சி என்ற தலைப்பிலே ஒரு நூலைப் போட்டிருக்கின்றோம். இந்த பதின்மூன்று மாத கால பி.ஜே.பி. ஆட்சியிலே என்னென்ன நடந்தது? என்பதை அதில் விளக்கியிருக்கின்றோம். கலைஞர் அவர்கள் எங்களுடைய மரியாதைக் குரியவர்தான் இன்னமும். தோழமைக் கட்சியினர் விமர்சனம் செய்தார் கள். அவர்கள் தோழமைக்குரியவர்கள். நான் அப்படி அல்ல. கலைஞர் அவர்களுக்கு உறவுக்காரன்.

## இரத்தக் கண்ணீர்

அதுவும் திராவிடர் கழகம் என்பது தாய்க் கழகம். சேய்களுக்கு இப்படி ஒரு சங்கடம் வந்திருக்கிறது. அதுவும் நம்முடைய வாழ்நாளி லேயே நம் கண் முன்னாலேயே இப்படி ஒரு சங்கடம் வந்திருக்கின்றது என்று நினைக்கும்பொழுது எங்களது உள்ளம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. மற்றவர்களுக்கு அது மகிழ்ச்சியாக இருக்கலாம். மறந்து போன சங்கதிகளை எல்லாம் இவர்கள் மேடை தவறாமல் நினைவூட் டிக் கொண்டிருக்கின்றார்கள். தேர்தல் பிரச்சாரமே ஆரம்பிக்கவில்லை. இது எங்கே போய் நிற்கப் போகின்றதோ தெரியவில்லை. தேர்தல் பிரச்சாரம் துவங்குவதற்கு முன்னாலேயே இப்படிப்பட்ட ஒரு இழி நிலை வந்திருக்கின்றதே என்று கருதுகின்றார்கள்.

## இலக்கு தெரிந்தவர்கள்

அதுவும் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களைப் பொறுத்த வரையிலே அவர்கள் ஏதேதோ புரியாமல் பேசக் கூடியவர்கள் அல்லர். அவர்க ளுக்கு எப்பொழுதுமே இலக்கு எது என்று தெரியும். அவர்களுடைய கருவி இலக்கை மட்டும்தான் தாக்கும். அவர்கள் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்க்கமாட்டார்கள்.

அப்படிப்பட்ட ஒரு உணர்வு படைத்தவர்கள். எனவே இவர்கள் மத்தியிலே போய் நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கின்றீர்கள்! உங்களை நீங்களும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. முயன்றால் நாங்களும் காப்பாற்ற முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றீர்கள் என்று சொல்லக்கூடிய நிலை இருப்பதால்தான் நாங்கள் பரிதாபத்தோடு பார்க்கின்றோம். பதின்மூன்று மாத கால பி.ஜே.பி. ஆட்சி என்னென்ன செய்திருக்கின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு கொடுத்திருக்கின் றோம்.

## நான்தான் முதல் எதிரி

யாராவது மறுக்கட்டும் நான்தான் இப்பொழுது அவர்களுக்கு எதிரியாகத் தோன்றுகின்றேன். அது மட்டுமல்ல; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சகோதரர் நடராஜன் போன்றவர்கள், அந்த அமைப்பின் தலைவர்களை எல்லாம் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கின்றார்கள்.

நீங்கள் என்னைப் பற்றி, என் குடும்பத்தைப்பற்றி எவ்வளவு தாக்கினாலும் அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். காரணம் எனக்கு இனமானம் உண்டு. எவ்வளவோ என்னைப்பற்றி கொச்சைப் படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான் அதற்கெல்லாம் பதில் சொல்வதில்லை.

## பேச்சாளிகள்

பல பேச்சாளர்களுக்குப் பேச்சுத் தொழில் உண்டு. பாவம் ஒரு மாதம் அவர்களுக்குப் பொதுக்கூட்டம் இல்லை என்றால் அவர்கள் வீட்டில் பூனை படுத்துத் தூங்கும். அப்படிப்பட்டவர்கள் நமது அனுதாபத்திற்குரியவர்கள். நிறைய கூட்டம் கிடைக்கவேண்டும். நிறைய வருமானம் வரவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் குறையக்கூடாது என்று நினைப்பார்கள். இப்படிப்பட்ட பொதுக்கூட்டங்களுக்குச் செல்வார்கள். நமக்குத் தெளிவாகத் தெரியும்.

## தலைவரே கீழே இறங்கி பேசுவதா

இப்படிப்பட்ட பேச்சாளர்கள் என்னை தாக்குவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. அந்தக் கட்சியினுடைய தலைவர்களே அந்த அளவுக்குக் கீழே இறங்கிவிட்டார்கள். அதுதான் எனக்கு இருக்கின்ற வேதனை.

அதுவும் முத்தமிழறிஞரா இப்படி? நீங்கள் இன்னும் எவ்வளவு பெரிய நிலைக்குப் போக வேண்டியவர்கள். அதை விட்டுவிட்டு எவ்வளவு சாதாரண நிலைக்கு வந்து பேச ஆரம்பித்துவிட்டீர்கள் என்று நினைக்கின்றபொழுது எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது.

## மறுப்பு சொல்லுங்கள்

நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்கு மறுப்பு சொல்லுங்கள் நாங்கள் வரவேற்கின்றோம். நாங்கள் எடுத்து வைக்கின்ற வாதங்களுக்குப் பதில் சொல்லட்டும். அதை நாங்கள் என்றைக்கும் கேட்கத் தயாராக இருக்கின்றோம்.

## திருத்திக்கொள்கிறோம்

தவறு என்று சொன்னால் எங்களை எந்த நேரத்திலும் நாங்கள் திருத்திக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றோம். அதே நேரத்தில் நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள் என்று நாங்கள் நிரூபிக்கும்பொழுது தவறு செய்து நீங்கள் திருந்திக் கொள்ள வேண்டும். நான் ஒரு படி மேலே நீங்கள் தண்டனை அடையவேண்டும் என்று கூட சொல்ல

மாட்டேன். நீங்கள் திருந்திக் கொள்ள வேண்டும். அந்த உணர்வுகளைக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நூல்களைப் போட்டிருக்கின்றோம். நீங்கள் அதை வாங்கிப் படிக்க வேண்டும்.

## ஜனசங்கம்

அதே மாதிரி காமராஜர் கொலை முயற்சி சரித்திரம் என்று ஒரு நூலைப் போட்டிருக்கின்றோம். அதையும் நீங்கள் வாங்கிப் படிக்க வேண்டும். காமராஜரைப் பட்டப் பகலில் உயிரோடு கொளுத்த முயன்றக் கூட்டத்திற்குப் பெயர் ஆர்.எஸ்.எஸ்., ஆரம்பக் காலத்தில் பி.ஜே.பி. என்று அதற்குப் பெயர் கிடையாது. அதற்குப் பெயர் ஜனசங்கம் என்று பெயர்.

## அப்பட்டமான பொய் அல்லவா/

ஆர்.எஸ்.எஸ்.சின் வார பத்திரிக்கையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைப்பற்றி ஒரு கேள்வி. அதிலே ஒருவர் கேள்வி கேட்கின்றார். காமராஜர் வீட்டிற்குப் பட்டப்பகலிலே தீ வைத்தக் கூட்டம் ஆர்.எஸ். எஸ். என்று சொல்லுகின்றதே - அது உண்மையா என்று ஒருவர் கேட்கின்றார். அதற்கு அந்த ஆர்.எஸ்.எஸ். இதழில் என்ன பதில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் அது அப்பட்டமான பொய் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

## உயிரோடு இருக்கின்றேன்

'காமராஜர் ஒரு கொலை முயற்சி சரித்திரம்' என்ற நூலையே தொகுத்தவன் நான். இன்னமும் உயிரோடு இருக்கின்றேன். இதை செய்யச் சொன்னதே தலைவர் தந்தை பெரியார் அவர்கள். காரணம், ஆர்.எஸ்.எஸ். என்பது அவ்வளவு பெரிய காட்டுமிராண்டிக் கும்பல். பி.ஜே.பி. என்பது அவ்வளவு பெரிய காட்டுமிராண்டி கும்பல். இதை நான் சொல்லவில்லை. கலைஞர் கொடுத்திருக்கின்றார் இந்தச் சான்றிதழை. ஆதாரத்தோடு உங்களுக்குச் சொல்லுகின்றோம்.

நமது அறிவுக்கரசு அவர்கள் இங்கே பேசும்பொழுது சொன்னார், வேட்டியா? துண்டா? கோவணமா? என்பதைப்பற்றி. அதைப் பின்னாலே பார்த்துக்கொள்வோம். முழுக்கத் துணிந்தவர்களுக்கு எது இருந்தால் என்ன? இல்லை என்றால் என்ன?

இந்த ஊர்க்காரர்கள் சகோதரர்கள் மன்னிக்க வேண்டும். நாம் ஒரு குடும்பத்தவர்களாக இருந்து பேசிக் கொண்டிருக்கின்றோம்.

## வேட்டி இல்லாமல் நிற்கிறீர்களே!

நமது மக்களை திராவிட பெருங்குடி மக்களே என்று சொல்லுகின்றோம். சிலபேர் விடாமல் குடிக்கின்றார்கள். நம்மாட்களும் அதை நிறுத்தவே மாட்டேன் என்கிறான். ஒருவர் போதையில் இருக்கின்றார். அய்யா வேட்டி நழுவி - வேட்டி இல்லாமல் நிற்கின்றீர்களே என்று சொல்லுகின்றோம். பிறந்த மேனியாக நிற்கின்றீர்களே என்று சொல்லுகின்றோம். உடனே அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? எனக்கா வேட்டி இல்லை. நீதான்டா வேட்டி கட்டாமல் இருக்கின்றாய் என்று

சொல்லுகின்றார். இந்த மாதிரி அனுபவத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதை இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லை.

## மத ஆபத்தை விளக்கினோம்

எனவே பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் காமராசர் ஒரு கொலை முயற்சி சரித்திரம் என்ற நூலில் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். 1966-ஆம் ஆண்டு இந்த சம்பவம் நடந்தது. இப்பொழுது அந்தச் சம்பவத்தை பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இரண்டாவது பதிப்பாக அந்த நூலை வெளியிட்டிருக்கின்றோம். இந்தியாவிலே மதவாதம் எப்படிப்பட்ட ஆபத்தை உருவாக்கும் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றோம்.

## திராவிடர் கழகத்தைப் பார்த்துக் கேட்கிறார்கள்

அது மாத்திரமல்ல, இப்பொழுதுகூட திராவிடர் கழகத்தைப் பார்த்துக் கேட்கிறார்கள். சென்ற தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்கள் கூட்டு வைத்திருந்தபொழுது நீங்கள் இவ்வளவு வேகமாக கண்டிக்கவில்லையே என்று கேட்கிறார்கள். கண்டிப்பதில் வேகமாகக் கண்டிப்பதென்ன? மெதுவாகக் கண்டிப்பதென்ன?

## கூட்டணி சேரக்கூடாது என்று கண்டித்தோம்

அ.தி.மு.க., பி.ஜே.பி.யுடன் கூட்டணி சேர்ந்தபொழுது கண்டித்தோம். கூட்டணி சேரக்கூடாது என்று சொன்னோம். தொடர்ந்து அதை வலியுறுத்தி சொல்லிக்கொண்டு வந்தோம். அ.தி.மு.க., பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்திருந்த பதின்மூன்று மாத காலத்தில் இடையறாமல் சொல்லிக்கொண்டே வந்தோம்.

## முதல் முறையாக அமர்ந்திருக்கின்றோம்

நாங்கள் எப்பொழுதாவது அதில் சமரசம் செய்துகொண்டிருக்கிறோமா? இன்னும் கேட்டால் நாங்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சகோதரர்களும் முதல்முறையாக இப்பொழுதுதான் அமர்ந்திருக்கின்றோம். காரணம் என்னவென்றால், அ.தி.மு.க., பி.ஜே.பி.யைக் கீழே தள்ளினார்களே அதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்.

## கால் இல்லாத நாற்காலி

தத்துவரீதியாகவே நாங்கள் தாய்க்கழகம். அ.தி.மு.க.வுக்கும் சேர்த்துத்தான். இருந்தாலும் எங்களுக்கு அப்பொழுது ஒட்டும் இல்லை - உறவும் இல்லை. நாங்கள் அ.தி.மு.க.வை கண்டிக்கவில்லையா? அப்பொழுதே அவைகளை எல்லாம் விளக்கி நூல் போட்டிருக்கின்றோம்.

வாஜ்பேயி இதற்குமுன் பதின்மூன்று நாட்கள்தான் ஆண்டார். பதின்மூன்று நாட்களைப் பார்ப்பதைவிட பதின்மூன்று மாதங்கள் வாஜ்பேயி ஆண்டது நிலையான ஆட்சிதான் - அவரைப் பொறுத்தவரையிலே.

சென்ற தேர்தலுக்கு முன்னாலே நான் பேசிய பேச்சை ஒரு நூலாகப் போட்டிருக்கின்றோம். இது பல பதிப்புகளாக வெளியே வந்திருக்கின்றன. வாஜ்பேயி பதின்மூன்று நாட்கள் ஆண்டபொழுது இந்து பத்திரிகை ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. வாஜ்பேயி அரசு கால் இல்லாத நாற்காலியாக இருக்கின்றது என்று காட்டியிருக்கின்றது. இது பதினொன்றாவது மக்களவையின் நிலை.

## பி.ஜே.பி. மக்கள் விரோத கட்சியே!

அப்பொழுது இவைகளை எல்லாம் நான் எடுத்துக் காட்டி பேசிய பேச்சு பாரதீய ஜனதா கட்சி மக்கள் விரோதக் கட்சியே. அதனிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். எனவே, பி.ஜே.பி., அ.தி.மு.க.வை தொடர்ச்சியாக விமர்சித்து நாங்களும் சரி, இந்த கம்யூனிஸ்ட் நண்பர்களும் சரி தொடர்ந்து விமர்சித்துக்கொண்டே வந்திருக்கின்றோம். இதில் நாங்கள் விட்டுக் கொடுத்ததே கிடையாது. ஏனென்றால் நாங்கள் மதச் சார்பின்மை என்பதை நம்பக் கூடியவர்கள். ஆகவே இடையறாமல் அந்தப் பணியை செய்கின்றோம்.

## அத்வானி சொன்னார்

இதிலே அவர்கள்கூட சொன்னார்கள். குறைவாக சொன்னார்கள் என்பது அல்ல.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு பி.ஜே.பி. கூட்டு வைத்தபொழுது அத்வானி சொன்னார் - எங்களுக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அ.தி.மு.க. அதிக இடங்களைக் கொடுக்கவேண்டும் என்பது அல்ல. குறைவாகக் கொடுத்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுவோம்.

## கணக்கு திறக்கவேண்டும்

ஏனென்று சொன்னால் எங்களுடைய நோக்கம் அதிக சீட்டுகளைப் பெறுவதல்ல. இந்த இடத்தை நீங்கள் நன்றாக கவனிக்க வேண்டும். நாங்கள் தமிழ்நாட்டில் கணக்கைத் திறக்கவேண்டும் என்று சொன்னார்கள். அ.தி.மு.க. துணைக்குப் போவதற்கு முன்னால் அவர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். அவர்களால் கணக்குத் திறக்கப்படமுடியவில்லை. வாக்கு வங்கிகளால் நுழையவே முடியவில்லை.

வாக்கு வங்கியைப் பெறவேண்டும். தமிழ்நாட்டிலே கணக்குத் திறக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலே கால் ஊன்ற வேண்டும் என்று நினைத்தார்கள். பி.ஜே.பி. என்ற அந்த நச்சுப் பாம்பு உள்ளே நுழைய நினைத்தது.

## நாங்கள் எந்தக் கோயிலையும் இடித்தவர்கள் அல்லர்

நாங்கள் கடவுள் மறுப்பாளர்கள். எங்களால் கடவுளை நம்புகிறவர்களுக்குத் தொல்லை இல்லை. காரணம் நாங்கள் எவ்வளவுதான் கடவுள் மறுப்பை தீவிரமாகப் பிரச்சாரம் பண்ணினாலும், மத மறுப்பைத் தீவிரமாக பிரச்சாரம் பண்ணினாலும், எந்தக் கோவிலையும் நாங்கள்

இடித்தவர்கள் அல்லர் (கைதட்டல்). எங்கள் கைகளிலே கடப்பாறையைத் தூக்கியதே கிடையாது. எந்தச் சர்ச்சையும் நாங்கள் இடித்ததே கிடையாது. கன்னியாஸ்திரீகளெல்லாம் எங்களிடத்திலே பத்திரமாக வரலாம்; திரும்பிப் போகலாம். ஏனென்றால் நாங்கள் பி.ஜே.பி.காரர்கள் அல்லர். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அல்லர்.

## இருபுறமும் பாதிரிமார்கள்

இன்னும் கேட்டால் பாதிரிமார்களிலிருந்து எல்லோரும் எங்களுடைய சகோதரர்கள். இப்பொழுதுகூட மனிதச் சங்கிலிக்காக கைகோர்த்துக் கொண்டு நின்றார்கள். நீங்கள் பார்த்திருப்பீர்கள். சென்னையிலும் மற்ற இடங்களிலும் நடந்தது. சென்னையில் நடந்த மனித சங்கிலியில் என் இருபுறங்களிலும் இரு பாதிரியார்கள் நின்றார்கள். எல்லோரும் ரொம்ப நகைச்சுவையோடு அதைப் பார்த்தார்கள். அவர்களுடைய பணியிலே எங்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் ரொம்பத் தெளிவானவர்கள். நாங்கள் அறிவுப்பூர்வமாகப் பிரச்சாரம் செய்யக்கூடியவர்களே தவிர வன்முறையை நம்பிக்கொண்டு சட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்ளமாட்டோம். அதுதான் மிக முக்கியம்.

## கணக்கு திறந்தது-
## மண்டைக்காடு கலவரம் ஏற்பட்டது

அதுமாதிரி இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே பி.ஜே.பி.யினர் கணக்குத் திறக்கவேண்டும் என்று அவர்கள் முயற்சித்தார்கள். எப்படியோ கொஞ்சம் வசதியாக வந்துவிட்டார்கள். ஏற்கெனவே அவர்களாலே ஒரேஒரு எம்.எல்.ஏ.யை சட்டமன்றத்திலே பெற்றிருக்கிறார்கள். அதுகூட வெளிப்படையாக பி.ஜே.பி. என்று இப்பொழுதுதான் வந்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே இந்து முன்னணி. அந்த முன்னணி என்கிற பெயரிலே நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் நின்றே அவர்கள் வருவார்கள். இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலே கொஞ்சம் ஆர்.எஸ்.எஸ்.சுக்குச் செல்வாக்கு வந்ததனால்தான் நண்பர்களே மண்டைக்காடுக் கலவரம் வந்தது. அப்பொழுதுதான் மண்டை ஓடு, மண்டைக் காடு எல்லாம் ஏற்பட்டது.

## ஆர்.எஸ்.எஸ். நுழைந்தது- கலவரம் வந்தது

அதனுடைய விளைவுதான் நீதிபதி வேணுகோபால் கமிசன். அங்கே காலம் காலமாக திருவிழா நடந்துகொண்டிருக்கிறது. அங்கே மீனவ சமுதாய சகோதரர்கள், கிறித்துவர்கள். மற்றவர்களெல்லாம் இருக்கின்ற இடத்திலே திடீரென்று அவ்வளவு பெரிய கலவரம் வந்ததற்குக் காரணம் - அந்த மாவட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். உள்ளே நுழைந்தது. ஆரியப் பாம்பின் நடமாட்டம் ஆரம்பமானது. நாங்கள் ரொம்ப காலத்திற்கு முன்பே சொன்னோமே - அதனுடைய விளைவு என்ன் ஆகும் என்று. அதேமாதிரி அந்த கன்னியாகுமரி மாவ்ட்டம் இப்பொழுது பலவீனமாகியது. அதற்கப்புறம் இப்பொழுது அதனுடைய செல்வாக்கு அங்கே குறைந்துவிட்டது.

## கோவையில் தலை தூக்கி ஆடியது

அப்புறம் அந்தப் பாம்பு கோவையிலே கொஞ்சம் தலைதூக்கி ஆடிற்று. கோவையிலே இருந்த பணக்கார சக்திகள் - தொழிலதிபர்கள் மற்றவர்களுக்கெல்லாம் வேறு தேவைகளுக்காக அது தேவைப்பட்டது. ஆகவே கம்யூனிஸ்ட்டுகளை எதிர்க்கவேண்டும், திராவிடர் கழகத்தை எதிர்க்க வேண்டும்; வேறு சில காரியங்களுக்கு இவைகளினால் பயனுள்ளது என்று சொல்லி இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். கோவைக்குள் நுழைந்தது.

## இராம. கோபாலன்

அங்கே இராம. கோபாலன் உள்ளே போனதனுடைய விளைவு தொடர்ந்து அங்கே கலவரம். விளைவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. நண்பர்களே, கோவையில் குண்டு வெடிப்பு, மதவாதம், தீவிரவாதம், அறுபது, எழுபதுபேர் சாகவேண்டிய ஒரு கொடுமையான நிலை ஏற்பட்டது. கோவையிலே அது காலூன்றியது இந்தக் கணக்கு அங்கு திறக்காமல் இருந்திருந்தால் தமிழ்நாட்டில் குண்டுக் கலாச்சாரத்திற்கு இடமே கிடையாது. அதற்கு எதிராக இன்னொருசாரார் தீவிரவாதத்திற்குப் போகவேண்டிய அவசியமே கிடையாது. இன்றைக்குப் பாஷா மனந்திருந்திய நிலையிலே, செய்தியாளர்கள் என்னிடத்திலே கேட்டார்கள். அதிகாரிகளை அனுப்பி பரிசோதித்துப் பாருங்கள்.

## மனம் திருந்தியவர்களுக்கு...

யாராக இருந்தாலும் அவர்கள் மனம் திருந்தி வந்தார்களென்றால் உண்மைதானா என்று பார்த்துவிட்டு அதற்குரிய வாய்ப்புகளைச் செய்துத்தர வேண்டும். ஏனென்றால் நமக்கு அரசியலிலே ஏதாவது முக்கியமான பிரச்சினைகள் வரவேண்டுமென்றால் தமிழ்நாட்டிலே வீரப்பன் பிரச்சினை இருக்கிறது (சிரிப்பு). உடனே வீரப்பனைப் பிடிப்பதற்கு ஆயத்தங்கள் நடந்து வருகின்றது என்றவுடன் எல்லா மக்களும் வீரப்பனைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாமெல்லாம் பட்டினி கிடப்பதைப்பற்றியெல்லாம் கவலையில்லை. வீரப்பனைப் பிடிக்க எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுவிட்டன. எல்லையில் வீரப்பன் வந்துவிட்டான் என்று அடிக்கடி செய்தி வரும்.

## வனக்காவலர்கள் என்ன ஆனார்கள்?

தற்பொழுது பாருங்கள், மூன்று நான்கு வனக் காவலர்கள் கடத்தப் பட்டார்கள். அது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? இல்லை - அரசாங்கத்திற்குத்தான் ஞாபகமிருக்கிறதா? ஆனால், குண்டுகள் வெடிப்பதற்கு முன்னாலே கண்டுபிடிக்கப்படக்கூடிய திறமை வாய்ந்த போலீசார் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். அதுவும் போலீஸ் அலுவலகத்திற்கு முன்னாலேயே வைப்பார்கள். அங்கே யார் வைத்தார்களோ அவர்களுக்குத் தெரியாமலேயே போலீஸ்காரர்கள் போய் வெடிப்பதற்கு முன்னாலேயே அந்தக் குண்டுகளை எடுப்பார்கள் - அவ்வளவு கெட்டிக்காரர்கள். ஆனால், வீரப்பன்தான் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. வீரப்பன் எங்கேயிருக்கிறார் என்று தெரியவில்லையே

என்று வனக்காவலர்களின் குடும்பம் துன்பத்தில் தவிக்கிறது. இவைக ளெல்லாம் சட்டம் - ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்பதற்கு அடையாளம்.

## ஒரு சான்ஸ் கொடுத்துப் பார்ப்போமே

ஆகவே, இந்த அடிப்படை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளுங் கள். கணக்குத் திறக்கவேண்டும் என்று சொன்னார்கள். இந்த கணக்குத் திறந்ததனாலே ஏற்பட்ட கோளாறு எப்படி என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் நினைக்கலாம் - இங்கேகூட நண்பர்கள் யோசிக்கலாம். என்னவென்றால் என்னங்க, ஒரே கட்சிக்கு ஏன் ஓட்டுப் போடவேண்டும்? இந்த முறை பி.ஜே.பி.க்கும்தான் ஓட்டுப் போட்டுப் பார்ப்போம். இன்னும் சிலபேர் அவர்களுக்கும்தான் ஒரு சான்ஸ் கொடுத்துப் பார்ப்போமே என்று நினைப்பார்கள். அவர்களும் தான் ஆட்சிக்கு வரட்டுமே என்று நினைப்பார்கள். "ராமன் ஆண்டால் என்ன - இராவணன் ஆண்டால் என்ன?" இது நம்ம நாட்டிலே உள்ள பழமொழி.

## அனுமார் ஆளக்கூடாது

ராமன் ஆண்டால் என்ன - இராவணன் ஆண்டலென்ன என்று சொல்லுவதே முதலில் பொறுப்பற்றத்தனம். இதற்கு இரண்டிற்கும் பத்தியிலே அனுமார் நாட்டை ஆண்டுவிடக்கூடாது (சிரிப்பு, கைதட் டல்). அது இன்னும் ஆபத்தானது. ஆகவே அந்த வகையிலே இப்பொழுது ராமன், அனுமார் எல்லோரும் ஒரே மாதிரி தெரியக்கூடிய சூழ்நிலைதான் உள்ளது. இந்தச் சூழல்களிலே கணக்குத் திறந்து காலூன்ற நினைக்கின்றார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் - அப்பொழுது அந்த தவறைச் செய்தது.

## தவறை ஒப்புக்கொண்டார்கள்

நம்முடைய தோழர்களிலே சிலபேர் கூட கேட்கலாம் - என்னங்க, அவர்கள் தவறு பண்ணவில்லையா? என்று. தவறு பண்ணினார்கள். ஒரு மனிதன் தவறு செய்வது முக்கியமல்ல. அந்தத் தவறைத் திருத்திக் கொள்வது என்பதுதான் மிக முக்கியம். தவறைத் தவறுதான் என்று ஒப்புக்கொள்ளக்கூடிய துணிச்சல் இருக்கிறதே அவ்வாறு சொல்லுவ தற்கே ஒரு தனித்தன்மை வேண்டும். அவர்களைப் பொறுத்தவரை யிலே யார் அந்த பி.ஜே.பி.யை ஆதரித்தார்களோ அந்த அனைத்திந் திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் அறிக்கை விட்டாரே. பி.ஜே.பி.யை நாங்கள்தான் தமிழ்நாட்டிற்கு அடையாளம் காட்டினோம்.; அந்தத் தவறைச் செய்தோம் என்று சொன்னார்கள்.

## கூடாது என்று சொன்னோம்

நாங்கள் கூடாது என்று சொன்னோம். அதை மீறிச் செய்தார்கள். அதனுடைய விளைவை அனுபவித்தார்கள் - நேரிலே புரிந்துகொண் டார்கள்.

## நல்ல பாம்பைக் கண்டு ஏன் நடுங்குகிறோம்?

நல்லபாம்பு என்றிருக்கிறதே, அதைப் பார்த்து நாம் ஏன் நடுங்க வேண்டும்? நல்ல பாம்பு என்றால் என்ன அர்த்தம்? பேரிலே நல்லது இருக்கிறது. நாகம்மா கோவில் இருக்கிறது. நாகம்மாவிற்கு நாங்கள் படைக்கிறோம் என்று சொல்லிப் பாம்புக்குப் பாலூற்றுவது மாதிரி பால் ஊற்றினார்கள். அதனுடைய விளைவை பதின்மூன்று மாதத்தி லேயே தெரிந்துகொண்டார்களே. ஆகவே அ.தி.மு.க., பி.ஜே.பி. கூட்டணியிலிருந்து வெளியே வந்தவுடனே அவர்கள் அனுபவ ரீதியா கச் சொல்லிவிட்டார்கள். நாங்கள்தான் உள்ளே விட்டோம் - பி.ஜே. பி.யை.

## புத்திசாலித்தனமாயிற்றே!

பி.ஜே.பி.யை ஒழித்து அதைத் துடைத்தெறியும் வேலையை நாங் கள்தான் செய்வோம் என்று சொல்லுகின்றபொழுது அவர்களைப் பயன்படுத்திக்கொள்வதுதான் புத்திசாலித்தனமே தவிர, அவர்களை ஒதுக்கி வைப்பது அறிவுடைமையா? தயவு செய்து சிந்திக்கவேண்டும்.

## சி.பி.எம்., சி.பி.அய்.
## ஏன் இந்த மேடையில் இருக்கிறார்கள்?

இன்னும் கேட்டால் ஏற்கனவே அவர்களை எதிர்த்தவர்கள் என்ன சொல்ல வேண்டும்? உங்களுக்குள்ளும் நமக்குள்ளும் பங்காளிச் சண்டை ஆயிரம் இருக்கலாம். அந்தப் பங்காளிச் சண்டையைப்பற்றிக் கவலையில்லை. நம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனிக் கட்சி. அதே மாதிரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.அய்.) தனிக்கட்சி. ஆனால் இரண்டு பேரும் சேர்ந்து கூட்டு ஏற்படுத்துகிறார்கள் ஒரு பொது நோக்கத்துடனே! ஏனென்றால், அவர்களுக்கு ஒரு பொது நோக்கம் இருக்கிறது. அதுமாதிரி நமக்கு நம்முடைய கொள்கைக்கு எது ஆபத்து என்கின்ற பார்வை இருக்குமேயானால் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடைய கொள்கைகளை - தத்துவங்களை நாம் உண்மையாகவே நம்பக்கூடியவர்களாக இருந்தால் அவர்களை வெறும்படமாகப் பார்க்காமல் பாடமாகப் பெற்றவர்களாக இருந்தால் என்ன செய்ய வேண்டும்? யார் வந்தாலும் பி.ஜே.பி.யைப் எதிர்ப்ப தற்கு நாம் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## ஊழலைப்பற்றிப் பேச
## எங்களுக்கு மட்டும் தகுதி உண்டு!

ஊழல், ஊழல் என்கிறார்களே என்ன ஊழல்? ஊழலைப்பற்றி அவர்கள் ரொம்ப அதிகமாகப் பேசாமல் இருப்பதுதான் நல்லது (சிரிப்பு. கை தட்டல்). ஏனென்றால், யார் அதுபற்றிப் பேசினாலும் அதற்கொரு தகுதி வேண்டும் (கை தட்டல்). நாங்கள் பேசலாம் ஊழலைப்பற்றி. ஏனென்றால், நாங்கள் தேர்தலில் நிற்காதவர்கள். நாங்கள் தேர்தலிலே எந்தக் கூட்டணியிலும் கிடையாது. இந்தக் கூட்டணியிலேயும் கிடையாது. நாளைக்கும் நாங்கள் தேர்தலில் சீட்டும்

கேட்கப் போவதில்லை ஓட்டும் கேட்கப் போவதில்லை. எங்களுக்காக (கை தட்டல்). ஆனால் நீங்கள் தவறு பண்ணிவிடக்கூடாதே.

## ஆயிரம் வசவுகள்

ஏனென்றால் நண்பர்களே எங்களுக்கு அடுத்த தேர்தலைப்பற்றி இருக்கின்ற கவலையைவிட அடுத்த தலைமுறையைப்பற்றிக் கவலைப்படக்கூடியவர்கள் திராவிடர் கழகத்திலே இருப்பவர்கள் (கை தட்டல்). ஆகவேதான் நாங்கள் இந்த நிலையை மிகத் தெளிவாக மக்களின் மத்தியிலே எடுத்துச் சொல்லுகின்றோம். இதற்கு ஆயிரம் ஆயிரம் வசவுகள், ஆயிரமாயிரம் அவதூறு சேறுகள் இவ்வளவையும் தாங்கிக் கொண்டு சேற்றிலே குளித்தால்கூட எங்களுக்கு கவலையில்லை.

## பெரியார்மீது மலத்தையே வீசினார்கள்

தந்தை பெரியார்மீது மலத்தை வீசினார்கள். அவர் உடலைக் கழுவிக் கொள்ள எழுந்திருந்து போனதில்லையே! அந்த மலத்துக்கு மேலே சால்வையைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அந்த நாற்றத்தையும் சகித்துக் கொண்டு இந்த மக்களுக்கு அறிவு சொன்னவர்கள் தந்தை பெரியார் அவர்கள். அவருடைய தொண்டர்கள் நாங்கள்.

## வேண்டுகோள் தானே விடுக்கின்றோம்

நீங்கள் எங்கள்மீது சேற்றை வாரிப் பூசினாலும், எங்கள்மீது மலத்தை வாரிப் பூசினாலும், எறிந்தாலும் அதுவும் எங்களோடு இருக்கக்கூடிய தோழர்கள் நாங்கள் உங்களுக்குப் பயன்பட வேண்டும் உங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டிய கட்டத்திற்குள் இருக்கக் கூடியவர்கள். காரணம் என்ன?

''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு''

மிகுதியாகச் சென்றால் இடித்துச் சொல்ல வேண்டும். நாங்கள் இடித்துக்கூடச் சொல்லவில்லை. ரொம்பவும் வேண்டுகோள் விடுத்துத் தானே சொல்கிறோம். காரணம் என்ன? பி.ஜே.பி.யும் ஒரு கட்சிதானே என்று சொல்லுபவர்களுக்கு நாங்கள் ஒன்றைச் சொல்லுகிறோம். பி.ஜே.பி. மற்ற அரசியல் கட்சிகளைப் போன்றதல்ல. அதைத்தான் இங்கே வந்திருக்கின்ற சகோதர - சகோதரிகள் தெரிந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையிலே அவர்களின் செயற்குழுகூடி முடிவினை எடுக்கிறார்கள்.

## பி.ஜே.பி.கூடி முடிவெடுக்கின்ற அமைப்பல்ல!

காங்கிரஸ் கட்சியினர் அவர்களுடைய செயற்குழுவைக்கூட்டி முடிவெடுக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூடி ஒரு முடிவெடுக்கின்றது. ஜனதாதளம்கூடி முடிவெடுக்கின்றது. அதே மாதிரி மக்கள் உரிமைக் கழகம்கூடி முடிவெடுக்கின்றது. ஆனால் நண்பர்களே ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்

டும். பி.ஜே.பி. அப்படிக்கூடி முடிவெடுக்கின்ற இயக்கமல்ல. காரணம், அதனுடைய லகான் எங்கே இருக்கின்றது என்று சொன்னால் - அதனுடைய கடிவாளம் எங்கே இருக்கிறது என்று சொன்னால் ஆர்.எஸ்.எஸ். என்று சொல்லக்கூடிய கும்பல் கையில் இருக்கின்றது.

அந்த ஆர்.எஸ்.எஸ். என்றால் என்ன? காந்தியைக் கொன்ற கோட்சே கும்பல்தான் ஆர்.எஸ்.எஸ். ரொம்ப சுருக்கமாகச் சொல்லுகின்றேன். நாதுராம் விநாயக் கோட்சே என்ற மராத்திப் பார்ப்பனர் காந்தியைச் சுட்டுக் கொன்றார்.

## இராமன் காந்தியைக் காப்பாற்றவில்லை!

ஹரேராம் என்று வீழ்ந்தார் காந்தி. கோட்சேவும் ராம் என்று சொல்லித்தான் சுட்டான். இரண்டு பேருக்குமே இராமன் மத்தியிலே இருந்தான் (கை தட்டல்). அப்படிப்பட்ட அந்த இராமன் பெயரைச் சொல்லித்தான் 'ஹரேராம்' என்று சொல்லிக் கொண்டுதான் விழுந்து உயிரைவிட்டார் காந்தி. இராமனுக்கு காந்தியைக் காப்பாற்றுகின்ற சக்தி அன்றைக்கு இருந்திருந்தால் இன்றைக்கு நம்முடைய தேசம் பிழைத்திருக்கும். ஆர்.எஸ்.எஸ். வளர்ந்திருக்காது (கை தட்டல்). அதைத்தான் நாங்கள் சொல்லுகின்றோம் வேறொன்றுமில்லை. அந்த, கும்பல் ராம் என்று சொல்லிக் கொண்டு காந்தியைக் கொன்ற கூட்டம். காமராஜர் வீட்டிற்குப் பட்டப் பகலிலேயே தீவைத்து அவரை உயிரோடு எரிக்க வேண்டும் என்று முயன்ற கூட்டம். மூன்றுமுறை இந்திய நாட்டிலே எந்த ஒரு அமைப்பும் மத்திய அரசாங்கத்தாலே தடை செய்யப்படவில்லை. ஆர்.எஸ்.எஸ்.சைத்தவிர.

## மூன்றுமுறை தடை செய்யப்பட்ட அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.

ஆர்.எஸ்.எஸ். மூன்று முறை தடை செய்யப்பட்ட இயக்கம். கம்யூனிஸ்ட் கட்சியினைக்கூட தடை செய்திருக்கிறார்கள் என்று வரலாறு உண்டு. ஆனால், ஒரு முறைதான். ஆனால் அவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வரவில்லை. மூன்றுமுறையும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் மாறி மாறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வந்திருக்கிறார்கள். நாங்கள் எதைப் பேசினாலும் ஆதாரத்தோடு பேசக்கூடியவர்கள். அந்த ஆதாரம் நூல்களிலே இருக்கின்றன. இல்லை என்று சொல்ல முடியாது. எங்கெங்கு கடிதம் எழுதினார்களோ அந்தக் கடிதப் போக்குவரத்தே எங்களிடத்திலே புத்தகமாக இருக்கிறது. யாராவது இதை மறுத்தால் நாங்கள் ஆதாரத்தை வெளியிடத் தயாராக இருக்கிறோம். காந்தியைக் கொன்றவுடனே 1948-இல் நெருக்கடி காலமான 1975,76-இல், அதேபோல பாபர் மசூதியை இடித்த நேரத்திலே - 1992-ல் என்று மூன்று முறை தடை செய்யப்பட்ட இயக்கம் தான் ஆர்.எஸ்.எஸ். இந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினுடைய கொள்கை என்ன? அவர்களுக்குக் கொள்கைப் பார்வை உண்டு. வேறு பார்வையே கிடையாது.

## இந்து என்பது நம்முடைய சொல் அல்ல

எது அவர்கள் கொள்கையென்றால் இந்துத்துவா. இதைத்தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்துத்துவா என்றால் என்ன?

சில பேர் நாம் இந்துக்கள்தானே என்று புரியாமல் கேட்கிறார்கள். இந்து மதம் என்பது வேறு. இந்துத்துவா என்பதுவேறு. இந்த இரண்டையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்துத்துவா என்பதை இந்து மதத்திலே இருந்துதான் உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் ஏன் அந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்? அதனுடைய தத்துவம் என்ன என்று சொன்னால் நண்பர்களே, அந்தச் சொல்லே முதலில் நம்முடைய நாட்டுச் சொல் அல்ல. இந்தியாவில் இருக்கின்ற மொழிகளில் எந்த மொழியிலும் அச்சொல் கிடையாது.

## பாரசீக மொழியில் திருடன் என்று பொருள்

பாரசீக மொழியில் இந்து என்பதற்குப் பொருள் உண்டு. என்ன அந்த பொருள் என்றால், திருடன் என்று பொருள். இவர்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் அதைப் பெருமை என்று நினைத்துவிட்டார்கள். இந்துத்வா என்பதினுடைய தத்துவம் என்னவென்றால், சுருக்கமாக சொல்கின்றேன். ஒரே மதம் தான் இந்த நாட்டிலே இருக்கவேண்டும். அதுதான் இந்து மதம். அதே மாதிரி ஒரு கலாச்சாரம்தான் இந்த நாட்டு மக்களாலே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதுதான் இந்துக் கலாச்சாரம் பார்ப்பனீயக் கலாச்சாரம்.

ஒரே மொழிதான் இந்த மக்களுக்கு இருக்க வேண்டும். அதுதான் சமஸ்கிருத மொழி. அதைத் தான் பரப்ப வேண்டும். வேறு எந்த மொழிக்கும் இங்கே இடமில்லை. வேறு எந்தக் கலாச்சாரத்திற்கும் இடம் கொடுக்க முடியாது.

## நாட்டைவிட்டு விரட்டப்படுவார்கள்

சிறுபான்மையினரான கிறிஸ்தவராக இருந்தாலும், இஸ்லாமியராக இருந்தாலும் அவர்கள் எங்களுடைய இராமனைக், கிருஷ்ணனை, கடவுளாக ஏற்றுக்கொண்டால்தான் அவர்களுக்கு இங்கு இடம் உண்டு. இல்லையேல் அவர்கள் இந்த நாட்டை விட்டே விரட்டப்படுவார்கள். இப்படி எங்கு எழுதப்பட்டிருக்கின்றது என்றால் ஆர்.எஸ்.எஸ்.சின் தத்துவ கர்த்தாவின் தலைவரான குருஜிகோல்வால்கர் எழுதிய நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த நூலுக்குப் பெயர் 'பஞ்ச் ஆப் தாட்ஸ்'.

ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் அதைத்தான் பின்பற்றுகின்றார்கள். இதை இல்லை என்று யாராவது மறுக்க முடியுமா? ஆகவே இந்த ஆர்.எஸ். எஸ். என்ன சொல்லுகின்றதோ அதை செய்வதற்குத்தான் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்திருக்கின்றது.

## ஆரிய தர்மம்தான் இந்துத்வா

ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் வடிவம் பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ்.சின் தத்துவம் என்ன? வர்ணாஸ்ரம தர்மம் நிலைக்க வேண்டும். பிரம்மாவின் முகத்தில் இருந்து பிறந்தவன் பிராமணன். பிரம்மாவின் தோளிலிருந்து பிறந்தவன் சத்திரியன். தொடையிலிருந்து பிறந்தவன் வைசியன். காலிலிருந்து பிறந்தவன் சூத்திரன். பஞ்சமன் எந்த இடத்திலிருந்து பிறந்தான் என்று இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே வர்ணாஸ்ரம தர்மத்தை நிலைநாட்டுவது இந்துத்வா. ஆரிய குல

தர்மத்தை நிலை நாட்டுவது இந்துத்வா ஏன் பி.ஜே.பி.யை எதிர்க்கின்றோம். நாங்கள் எல்லாம் தேர்தல் கூட்டணிக்காக இந்த மாநாடு போடவில்லை. இதனுடைய ஆபத்து என்ன என்பதை நாங்கள் புரிந்து கொண்ட காரணத்தால் எச்சரிக்கை செய்கின்றோம்.

## திராவிடர் கழகம் கலங்கரை விளக்கம்

திராவிடர் கழகம் என்பது என்ன? புதுவை கடற்கரைக்குப் போனால் உங்களுக்குத் தெரியும். கலங்கரை விளக்கம் இருக்கும் திராவிடர் கழகம் என்பது கலங்கரை விளக்கம். கப்பல்கள் வழி தவறிப் போகாமல் இருப்பதற்காக அது வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். அந்தக் கலங்கரை விளக்கம் சுழன்று கொண்டேயிருக்கும். அந்த பணி ஒரு தொடர்பணி. அந்தப் பணி ஒரு அரசியல் பணி அல்ல.

சில நண்பர்கள் குழம்பிப்போய் கோபப்பட்டு - ஆத்திரப்பட்டு வசைமாரி பொழிகிறார்கள். அது மாதிரியான அரசியல் பணியை நாங்கள் செய்ய மாட்டோம். அரசியலுக்கும் எங்களுக்கும் ரொம்ப தூரம். நாங்கள் அங்கு போக மாட்டோம். கூட்டணியிலே இடம் கேட்க மாட்டோம். ஆனால் அதே நேரத்திலே இதை ஏன் சொல்லுகிறோம்?

## குலதர்மக் கொடியை ஏற்ற நினைப்பது - பி.ஜே.பி.

இராஜகோபாலாச்சாரியார் குல தர்மத்தைக் கொண்டு வந்தபொழுது காமராஜரை துணை கொண்டு குலதர்ம கல்வித் திட்டத்தை ஒழித்து எப்படி பெரியார் ஒரு சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தினாரோ அதே குலதர்மக் கொடியை ஏற்றுவதற்குப் பெயர்தான் பி.ஜே.பி.யினர் ஆட்சி. யாராவது இதை மறுக்க முடியுமா?

நாங்கள் ஏன் துடியாய்த் துடிக்கின்றோம். உங்களை ஏன் எச்சரிக்கை செய்கின்றோம்? குல தர்மக் கொடியைப் பறக்க விடுவதுதான் பி.ஜே.பி.யின் கொள்கை. அதற்குத்தான் வாஜ்பேயி இருக்கின்றார். அதற்குத்தான் மற்றவர்கள் இருக்கிறார்கள். அதை புரிந்து கொள்ளுங் கள்.

## பெண்களுக்குச் சம உரிமை நமது கொள்கை: பெண்களை எரிப்பது பி.ஜே.பி. கொள்கை

மக்களின் சரி பகுதியாக இருக்கின்ற பெண்களை சமமாக நினைப்பது நமது பண்பாடு. இப்பொழுது குறள்நெறி எழுதியவர்களுக்கெல்லாம் நாம் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'பெண்ணின் பெருந் தக்க யாவுள' இது நமது பண்பாடு.

பெண்கள் பிறவி அடிமைகளாக இருக்க வேண்டியவர்கள். வாழ்நா ளில் எந்த சுதந்திரத்திற்கும் அவர்கள் இலாயக்கற்றவர்கள். இது மனு தர்மத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல; பெண்களில் விதைவைகளாக ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு மறுமணம் செய்யக்கூடியது திராவிட கலாச்சாரம். திராவிட பண்பாடு. திராவிட இயக்கங்களினுடைய கொள்கை. கணவனை இழந்த பெண்களை அவர்களே விரும்பாவிட்

டாலும், தேடிப் பிடித்துக் கொண்டு வந்து - உடன்கட்டை ஏறுதல் என்ற பெயரால் உயிரோடு எரிக்க வேண்டும். அப்படி எரித்த பிற்பாடு அவர்களுக்குச் சதிமாதா கோயில் கட்ட வேண்டும் என்று சொல்கின்ற வர்கள் இந்த ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. கூட்டத்தினர். இராஜஸ்தானத் திலே கணவனை இழந்த ரூப்கன்வார் என்ற பெண்ணை உயிரோடு எரித்து இன்றைக்கு சதிமாதா கோயில் கட்டி மக்கள் அதைக் கும்பிட்டுக் கொண்டிருக்கவில்லையா? நாடே இராஜஸ்தானாக ஆக வேண்டும் என்று வாஜ்பேயி விரும்புவது நமக்குப் புரிகிறது. கலைஞர் அவர்கள் அதற்குத் துணை போகலாமா? திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் குற்றத்தை செய்வதற்கு துணை போகலாமா? நாளைக்கு நம்முடைய நாட்டிலே பெண்கள் விதவைகளாகக்கூட இருக்க முடியாதய்யா! அடிப்படை தத்துவத்திலேயே பெரிய மாறுபாடு உண்டு.

## நரி சைவமாகாது

எனவே, பி.ஜே.பி.யினர் வெறும் அரசியலுக்காகப் பதவிக்காக வரவில்லை. அவர்கள் முழுக்க முழுக்க ஆர்.எஸ்.எஸ்.சினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றார்கள். இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பி.ஜே.பி.யினர் மாறிவிட்டார்கள். நரி சைவமாகிவிட்டது என்று கலைஞர் சொல்லுகின்றார். பி.ஜே.பி என்கிற நரி ஒரு போதும் சைவமாகாது. நீங்கள் வேண்டுமானால் சைவமாகலாம்.

## சிறுத்தை - புள்ளிகளை மாற்றினாலும்...

சிறுத்தைத் தன்னுடைய புள்ளிகளை மாற்றிக் கொண்டாலும், நரி தன்னுடைய குணத்தை மாற்றிக் கொள்ளாது.

## பிரதமர் மன்னிப்பு கேட்டார்

ஆர்.எஸ்.எஸ். தத்துவம் தெரியாதவர்களுக்கெல்லாம் கடந்த தேர்த லில் டிக்கெட் கொடுக்கலாமா? என்று ராஜேந்திரசிங் - -வாஜ்பேயி அவர்களைப் பார்த்துக் கேட்கின்றார். அதற்கு பிரதமர் வாஜ்பேயி - மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்கின்றார். இது நடத்த செய்தி.

## வாஜ்பேயியும் பதின்மூன்றும்...

வாஜ்பேயி முதல் முறையாக ஆட்சி ஆண்டது பதின்மூன்று நாட்கள். இரண்டாவது முறையாக ஆட்சி ஆண்டது பதின்மூன்று மாதங்கள். வருகின்ற மக்களவை தேர்தலும் பதின்மூன்றாவது. வாஜ்பேயிக்கும் இந்த பதின்மூன்றுக்கும் ரொம்ப நெருக்கம். எங்களுக்கு ஒன்றும் இந்த பதின்மூன்றில் நம்பிக்கை கிடையாது. ஒரு உச்சநீதிமன்ற நீதிபதிகூட பதின்மூன்றைக் கண்டு பயந்த செய்தி எல்லாம் உண்டு.

## கவர்ச்சிக்கு இங்கு வேலையில்லை; அறிவுக்கு முதலிடம்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிடியிலே இருக்கக்கூடிய பி.ஜே.பி., அமைப்பிற்கு என்ன அடையாளம் என்று சொன்னால் நண்பர்களே,

ஒரு செய்தியை உங்களுக்குக் காட்டுகின்றேன். பல பத்திரிகைகளில் வராத செய்தி எங்களுடைய ஏடு 'விடுதலை'யில் வெளிவரும். எங்களுடைய பத்திரிகையில் சினிமா இருக்காது, ஜோசியம் இருக்காது. ஆனால், அறிவுப் பூர்வமான செய்திகள் இருக்கும். அதனால் குறைச்சலான பேர்கள்தான் படிப்பார்கள். ஏனென்றால், இங்கு கவர்ச்சி கிடையாது. எங்களுக்கு இந்தக் கவர்ச்சி அது, இது இவைகளில் எல்லாம் நம்பிக்கை இல்லை. மனிதனுக்கு அறிவை உண்டாக்க வேண்டும். அதுதான் எங்களுடைய கவலை.

ஒரு டாக்டர் நோயாளிக்கு சிகிச்சை செய்யும்பொழுது கவர்ச்சியைப் பார்த்துக் கொண்டா சிகிச்சை செய்கின்றார்? அவர் நோய்க்கு மட்டும் தான் மருந்து கொடுப்பார். அதுமாதிரி எங்களின் பணி.

## வாஜ்பேயிக்கு தி.மு.க. கொடுத்த சான்றிதழ்

இது எங்களுடைய 'விடுதலை' ஏட்டில் வந்த ஒரு செய்தி. இதில் பிரதமர் வாஜ்பேயி அவர்களும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜேந்திர சிங் என்பவரும் சந்தித்து பேசிய படம். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் ராஜேந்திரசிங் குளியல் அறையில் வழுக்கி விழுந்துவிட்டார். ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் இருந்த ராஜேந்திரசிங் அவர்களை பிரதமர் வாஜ்பேயி போய் சந்தித்து உடல் நலம் விசாரிக்கின்றார். யார் நல்லவர்? - வல்லவரான வாஜ்பேயி அவர்கள். தாசில்தார் சர்டிபிகேட் கொடுக்கின்ற மாதிரி தி.மு.க. கொடுத்த நன்னடத்தை சர்டிபிகேட் இது.

## இருட்டடிப்பு செய்யப்பட்ட செய்தி

பிரதமர் வாஜ்பேயி ஆர்.எஸ்.எஸ். தலைவரை சந்தித்த செய்தியை மீடியா என்று சொல்லக்கூடிய பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்தன. இந்தச் செய்தி எங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று சொன்னால், இப்பொழுது கணினி புரட்சி வந்த காரணத்தினாலே 'இண்டர்நெட்' என்று சொல்லக்கூடிய இணையம் இருக்கிறதல்லவா - அதன் மூலம் இந்த செய்தி வெளியானது. அந்த செய்தியை தேர்ந்தெடுத்து - கண்டுபிடித்து மக்களுக்கு இதைக் கொடுத்திருக்கிறோம்.

## வாஜ்பேயியிடம் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கேட்ட கேள்வி

வாஜ்பேயி அவர்கள் ராஜேந்திரசிங் அவர்களுடைய உடல் நலனை விசாரித்தபொழுது, ராஜேந்திர சிங் முதலில் ஒரு கேள்வியைக் கேட்டார் - வாஜ்பேயி அவர்களே நீங்கள் இன்னமும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்தானே என்று கேட்டார். அதற்கு வாஜ்பேயி பதில் சொல்லுகின்றார் - ஆம் குருஜி என்று. உடனே அடுத்த கேள்வியை ராஜேந்திரசிங் கேட்கிறார் - தற்பொழுது கலைக்கப்பட்ட பன்னிரெண்டாவது மக்களவையில் இருந்த பி.ஜே.பி. எம்.பி.க்கள் 70 பேருக்கு ஆர்.எஸ்.எஸ். என்றால் என்ன அதன் வரலாறு என்ன என்றே தெரியவில்லையே என்று கேட்டார்.

## சட்டையைக் கழட்டியவுடன் மூன்றாவது நாள் அமைச்சர்!

அதுமட்டுமல்ல; ஆர்.எஸ்.எஸ்.பற்றி தெரியாதவர்களுக்கே தேர்தலில் டிக்கெட் கொடுத்திருக்கின்றீர்களே என்றார். ஒருவேளை ரெங்கராஜன் குமாரமங்கலம் போன்றவர்களை மனதில் வைத்துக்கொண்டு கேட்டிருப்பார் போல தெரிகிறது (சிரிப்பு).

ஏன் ஏன்றால், முதல்நாள் சட்டையைக் கழட்டினார். இரண்டாவது நாள் காவிக்கொடியைத் தூக்கினார். மூன்றாவது நாள் மந்திரியாகிவிட்டார். நான்காவது நாள் கலைஞரோடு கூட சுற்றுப்பயணம் பண்ணுகிறார் (சிரிப்பு).

நமக்குத் தெரிந்தது உள்ளூர் கதை. இப்படி நிறையப்பேர் இருப்பார்கள்.

## ஏழுபேர் கொண்ட ஆர்.எஸ்.எஸ். குழு

அடுத்து ராஜேந்திரசிங் சொல்லுகின்றார். நான் ஏழுபேர் கொண்ட ஆர்.எஸ்.எஸ். கொள்கை வகுப்புக் குழுவை அமைத்திருக்கின்றேன் என்று சொல்லுகின்றார். இது விளையாட்டல்ல. இது எங்கே போகின்றது? எப்படி நடக்கின்றது என்பதை பொறுப்புள்ளவர்கள் கவலையோடு சிந்திக்க வேண்டும். அந்த ஏழுபேர் கொண்ட ஆர்.எஸ்.எஸ். குழுவில் யார் யார் முக்கிய தலைவர்களாக இருக்கின்றார்கள் என்றால், இராஜேந்திர சிங், தத்தோபந்த் தெங்கடி, எச்.வி. சேஷாத்திரி போன்ற மூத்த தலைவர்கள் இடம்பெற்றுள்ளனர். தொடர்ந்து இராஜேந்திரசிங் சொல்லுகின்றார் - 'வருகின்ற பதின்மூன்றாவது மக்களவைத் தேர்தலிலே அதாவது நடக்கப்போகின்ற தேர்தலிலே இனி ஆர்.எஸ்.எஸ். கொள்கை தெரிந்தவர்களுக்குத்தான் தேர்தல் டிக்கெட் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகின்றார்.

இராஜேந்திர சிங், வாஜ்பேயியிடம் சொல்லுகின்றார்: நீங்கள் பதின் மூன்றாவது மக்களவைக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தவுடனே அந்த பட்டியலை எங்களுக்கு அதாவது எழுவர் கொண்ட ஆர்.எஸ். எஸ். கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். எந்தெந்த வேட்பாளர்கள் ஆர்.எஸ்.எஸ். கொள்கை தெரிந்தவர்கள் என்பதை சரிபார்த்து நாங்கள் டிக்மார்க் செய்தால்தான் நீங்கள் அவர்களுக்கு தேர்தலில் வேட்பாளர்களாக நிற்க டிக்கெட் தர வேண்டும். இந்துத்துவா கொள்கையில் அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்து ராஷ்டிரத்தை நிறுவ வேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று சொன்னவுடனே அதை வாஜ்பேயி முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அப்படியே செய்கிறேன் என்று ஏற்றுக்கொண்டு வருகின்றார்.

## பி.ஜே.பி.க்கு நாடு முழுக்க அதிகாரிகள்

அது மட்டுமல்ல; பி.ஜே.பி.க்கென நாடு முழுவதும் 144 அதிகாரிகள் முழுநேர ஊழியர்களாக பணியாற்றுகிறார்கள். இவர்களைப் பயன்படுத்திக் கொண்டால் பெரிய வெற்றியைப் பெற்றுவிடலாம் என்றும் பேசிக் கொண்டார்கள்.

## புதுவை ஆளுநர் ஆர்.எஸ்.எஸ்.காரர்

இந்த பதின்மூன்று மாத கால பி.ஜே.பி. ஆட்சியிலே ஆளுநர்கள் உட்பட ஆர்.எஸ்.எஸ்.காரர்களையே அதிகாரிகளாக நியமித்தார்கள். அதற்கு அங்கு, இங்கு எல்லாம் ஆதாரம் தேடவேண்டிய அவசிய மில்லை. புதுவை மாநில இன்றைய ஆளுநராக இருக்கின்றாரே திருமதி டாக்டர் ரஜினிராய் அம்மையார் அவர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினு டைய தீவிர உறுப்பினர். அதன் காரணமாக அவரால் முடிந்த அள வுக்கு 'இந்துத்துவா' கொள்கையை முந்தாநாள் செயல்படுத்தினார். என்ன செய்தார் என்று சொன்னால்; சங்கரமடத்தினுடைய ஒரு கிளையாக ராஜ்நிவாசை ஆக்கினார். இதைவிடக் கண்டனத்திற்குரிய ஒரு செயல் வேறு இல்லை. திராவிடர் கழகம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது (கைதட்டல்).

## செக்குலரிசத்தை உடைத்தார்-ஆளுநர்

நீங்கள் பதவி ஏற்கும்பொழுது எந்த அரசியல் சட்டத்தின்படி பிரமா ணம் எடுத்துக்கொண்டீர்களோ அதில் சொல்லப்பட்டிருக்கின்ற செக்கு லர் என்பதைப்போட்டு உடைத்து விட்டீர்கள். ஆளுநர் அம்மையார் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால் அவர் தனியேபோய் சங்கராச்சாரி யாரை பார்க்கட்டும். ஆனால், புதுவையில் ராஜ்பவனுக்குப் பெயர் ராஜ் நிவாஸ் என்று பெயர். அந்த ராஜ் நிவாசிலே சங்கராச்சாரியாருக்கு வரவேற்புக் கொடுத்தார்.

நேற்றைய தினம் செய்தியாளர்கள் என்னிடத்திலே கேள்வி கேட்ட பொழுது இந்த செய்தியை சொல்லியிருக்கின்றேன். நல்ல அளவுக்கு நீங்கள் சிந்திக்க வேண்டும். 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருந்தது. அதைப் பார்த்தவுடன் சிதம்பரத்திலேயே அதற்கு பதில் சொன்னேன். இது தவறான செய்தி அல்ல. ஆதாரப்பூர்வமான செய்தி.

## சங்கராச்சாரிக்கு ஆளுநரின் பக்தி கலந்த வரவேற்பு!

'இந்து' பத்திரிக்கையில் எழுதியிருந்த செய்தியை சொல்லுகின்றேன். புதுவை ஆளுநர் திருமதி ரஜினிராய் மற்றும் அவரது கணவர் இருவரும் காஞ்சி காமகோடி பீடாதிபதிக்கு பக்திகலந்த வரவேற்பு கொடுத்தார்கள் என்று போடப்பட்டிருக்கின்றது. மக்கள் வரி கொடுப்பது இந்தப் பணிக்காகத்தானா? மதச்சார்பின்மை என்பதற்கு இதுதான் இலக்க ணமா? ஆர்.எஸ்.எஸ்.காரரை ஆளுநராகக் கொண்டு வந்து வைத்தால் அவர் என்ன செய்வார் என்பதற்கு அடையாளம் இதுதான்.

## ஒவ்வொரு மதவாதியும் இப்படிச் செய்ய ஆரம்பித்தால்....

இப்படி ஒவ்வொரு மதவாதியும் செய்ய ஆரம்பித்தால் என்ன ஆகும்? நியாயங்கள் என்ன ஆகும்? காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் இப்பொழுது கூட சொல்லியிருக்கின்றார். நீங்கள் பார்த்திருப்பீர்கள். தி.மு.க., பி.ஜே.பி. கூட்டணி ரொம்ப அற்புதமான கூட்டணி என்று சொல்லியிருக்கின்றார். அதனை வரவேற்கிறேன்

என்று சொல்லிவிட்டார். காஞ்சிகாமகோடி தலைமைப் பீடத்தின் ஆசிர் வாதம் - கலைஞர் அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. எங்களைப் பற்றி எல்லாம் இனிமேல் அவர்களுக்குக் கவலை இல்லை. சங்கராச்சாரியார் சொல்லுகின்றார். இது சந்தர்ப்பவாத கூட்டணி என்று சிலபேர் சொல்லி யிருக்கின்றார்கள். அது உண்மைதான். சந்தர்ப்பவாதமும் சில நேரங்க ளில் சேருவது நல்லது என்று எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கின் றார் பார்த்தீர்களா? பரவாயில்லை. சந்தர்ப்பவாதமாக இருந்தாலும் அவருடைய பாணியில் நான் ஆசீர்வாதம் பண்ணுகின்றேன் என்று சொல்லியிருக்கின்றார்.

## வட மாநிலங்களில் எனக்குத் தொடர்பு உண்டு

அது மட்டுமல்ல - வட மாநிலங்களில் பி.ஜே.பி. அரசு துணைவேந் தர்களை நியமித்தது. அவர்கள் யார் என்று சொன்னால் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீவிர உறுப்பினர்கள். எனக்கு வட மாநிலம் முழுக்க தொடர்பு உண்டு. புது தில்லியிலே பெரியார் மய்யம் கட்டிக் கொண்டி ருக்கின்றோம். அந்த மய்யம் சமூக நீதிக்காக பாடுபட இருக்கிற மய்யம்.

## ஆர்.எஸ்.எஸ்.காரர்தான் துணை வேந்தர்

உத்தர பிரதேசப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தர் நியமிக்கப் பட வேண்டும். மூன்று பேர் கொண்ட பட்டியல் சென்றிருக்கின்றது. அதில் ஒருவர் விஞ்ஞானி - பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த வர். நல்ல அறிவு - திறமை உள்ளவர். சென்ற முறையே இவருடைய பெயர் துணை வேந்தர் பதவிக்கு சென்றது. சென்ற முறை கொடுக்க வில்லை. ஆகவே, இந்த முறையாவது இவருக்கு துணைவேந்தர் பதவி கொடுக்க வேண்டும் என்று சமூகநீதியில் நம்பிக்கை உள்ளவர்கள் சென்று கேட்டார்கள்.

## பச்சையாக சொன்னார் - உ.பி. ஆளுநர்!

அதற்கு உ.பி. ஆளுநர் ஒரே வார்த்தையில் பதில் சொன்னார். அதுவும் பச்சையாக - பளிச்சென்று பதில் சொன்னார் - இவருக்கு எல்லாத் தகுதியும் இருக்குதுங்க. ஆனால், முக்கியமான ஒரு தகுதி இல்லைங்க என்று சொன்னார் - என்னங்க அந்தத் தகுதி என்று கேட்டார்கள். இவர் ஆஸ்.எஸ்.காரர் இல்லை என்று ஆளுநர் சொன் னார். ஆர்.எஸ்.எஸ்.காரர்களை மட்டும்தான் நாங்கள் துணை வேந்தர்க ளாக நியமிக்க முடியும் என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டார்.

## 80,000 உத்தியோகங்கள் பி.ஜே.பி.யினரே

அது மட்டுமல்ல நண்பர்களே, மேலும் புரிந்து கொள்ளுங்கள். எண்பதாயிரம் உத்தியோகங்களில் மத்திய அரசின் பல முக்கிய துறைக ளில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களையே நியமித்துவிட்டார்கள். அது சாதா ரண உத்தியோகங்கள் அல்ல. நிர்வாகத் துறையில் உள்ள உத்தியோ கங்களில் நிரப்பி விட்டார்கள். இந்த உத்தியோகங்களை எல்லாம் இந்த பதின்மூன்று மாத கால ஆட்சியிலே நிரப்பி வைத்திருக்கின்றார்கள்.

## மாநிலங்களவையில் கேள்வி

அது மட்டுமல்ல மதவாதங்கள். மதக்கலவரங்கள் எவ்வளவு நடந்திருக்கின்றன என்கிற செய்தி மாநிலங்களவையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சட்டம், ஒழுங்கைப்பற்றி கேள்வி கேட்கின்றார். எல்.கே. அத்வானி பொறுப்பேற்றிருக்கின்ற உள்துறை அமைச்சகத்தின் சார்பில் ஆண்டு அறிக்கையிலே உள்ளதை பதிலாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

## மதவாதம் கொண்ட அரசு இல்லையாம்!

நீங்கள் இதை நன்றாக கவனிகக வேண்டும் நாங்கள் ஏதோ கற்பனையாகச் சொல்லவில்லை. இப்பொழுது கூட்டு சேர்ந்துள்ள நண்பர்கள் சொல்லுகின்றார்கள். வாஜ்பேயி அரசாங்கம் ரொம்ப நல்ல அரசாங்கம், மதவாதத்தை எல்லாம் அது கடைபிடிப்பதில்லை என்று சொல்கிறார்கள். பி.ஜே.பி. அரசு மதவாதம் கொண்ட அரசல்ல. அப்படி எல்லாம் கிடையவே கிடையாது என்று சொல்லுகின்றார்கள்.

## உள்துறை அமைச்சகம் கொடுத்த அறிக்கை

உள்துறை அமைச்சகமே சொல்லுகின்றது - இந்த ஓராண்டிலே பி.ஜே.பி. ஆண்ட காலத்திலே எவ்வளவு கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை சொல்லியிருக்கின்றது.

## வகுப்புக் கலவரங்கள் 626

இந்த பதின்மூன்று மாத காலத்தில் வகுப்புக் கலவரங்கள் 626 நடைபெற்றிருக்கின்றன. இதிலே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 207 பேர். படுகாயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 2065 பேர் நாள் ஒன்றுக்கு சராசரியாக ஏழு பேர். இக்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

## 1997-இல் கிறித்துவர்கள்மீது தாக்குதல்

அது மட்டுமல்ல; இதற்கு முதல் ஆண்டு 1997ஆம் ஆண்டு பெரும்பாலான தாக்குதல்கள் கிறித்துவர்கள் மீதே நடைபெற்றிருக்கின்றன. முதலில் பாபர் மசூதி மூலம் இஸ்லாமியர்கள் தாக்கப்பட்டனர். அடுத்து கிறித்துவர்கள் தாக்கப்பட்டார்கள்.

## ஒரிசாவில் பாதிரியாரை குடும்பத்தோடு எரித்தனர்

உங்களுக்குத் தெரியும். ஒரிசாவிலே இருந்த கிறித்துவ பாதிரியார் கொல்லப்பட்டார் என்பது. ஆஸ்திரேலிய நாட்டு பாதிரியார் ஸ்டெயின்ஸ் ஒரிசாவில் உள்ள தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தவர். அவரையும் அவரது இரு பிள்ளைகளையும் சங்பரிவாரத்தினைச் சார்ந்த பஜ்ரங்தளத்தில் உறுப்பினரான தாராசிங் மற்றும் பலர் ஒன்று சேர்ந்து அவர்களைக் குடும்பத்தோடு தீ வைத்து எரித்தனர். இந்த குற்றத்தை செய்தவர்கள் பஜ்ரங்தளத்தைச் சார்ந்தவர்கள் என்று ஒரிசா டி.ஜி.பி.யே கூறியிருக்கின்றார். அதையே முன்னாள் மத்திய அமைச்சர் மதன்லால் குரானாவும் சொல்லியிருக்கின்றார்.

## எல்.கே. அத்வானியின் நொண்டிச் சாக்கு

அதற்கு எல்.கே. அத்வானி என்ன சொன்னார்? பஜ்ரங் தள அமைப்பைச் சார்ந்தவர்கள் மிகவும் நல்லவர்கள்; அவர்கள் அப்படி செய்திருக்க மாட்டார்கள் என்று அவரே இதை வெளிப்படையாகவே சொன்னார். எனவே நண்பர்களே பிரதமர் வாஜ்பாய் ஆர்.எஸ்.எஸ்.காரர் என்பதை மறுக்க முடியுமா? குஷாபாவ் தாக்கரே ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்து வந்த ஒரு தலைவர். அதே மாதிரி எல்.கே. அத்வானி ஒரு ஆர்.எஸ்.எஸ். தலைவர்.

இங்கேயுள்ள இல. கணேசன்களிலிருந்து இராம கோபால அய்யர் உட்பட இப்படிப்பட்டவர்கள் தான் ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி.யில் இருக்கிறார்கள். 'இந்துத்துவாவில் கரைந்த தி.மு.க.' என்ற ஒரு நூல் திராவிடர் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

## சென்ற தேர்தலில் கலைஞர்

சென்ற வருடம் தேர்தல் நேரத்திலே கலைஞர் பேசியிருக்கின்றார். என்ன சொல்லுகிறார் தெரியுங்களா? இந்தச் செய்தியை 22-ஆம் பக்கத்தில் எடுத்துப் போட்டிருக்கின்றோம்.

26.2.98 'முரசொலி' பத்திரிக்கையில் வெளிவந்த கலைஞர் அவர்களுடைய பேச்சை இப்பொழுது நான் படித்துக் காட்டுகின்றேன்.

## வாஜ்பேயிபற்றி

"வாஜ்பேயி அவர்களைப்பற்றி நான் சுருக்கமாக உங்களிடம் சொல்ல விரும்புகின்றேன். நான் சொன்னால் உங்களுக்குச் சுலபமாக எடுபடுமோ, எடுபடாதோ தெரியாது. வாஜ்பேயி அவர்களைப்பற்றி அவருடைய கட்சியைச் சேர்ந்த பொதுச் செயலாளர் கோவிந்தாச்சாரியா குறிப்பிட்டிருக்கிறார். "திரு வாஜ்பேயி, நாங்கள் பி.ஜே.பிக்கு அணிவித்திருக்கிற முகமூடி (Mask) என்று. வாஜ்பேயி என்ற அந்த உருவம் இருக்கிறதே அது பாரதீய ஜனதா கட்சிக்கு அணிவிக்கப்பட்டிருக்கின்ற முகமூடி என்று அவருடைய கட்சியைச் சேர்ந்த கோவிந்தாச்சாரியா குறிப்பிட்டிருக்கின்றார்.

## மக்களை ஏமாற்ற முகமூடி

ஆமாம்! பொது மக்களை ஏமாற்றுவதற்கு வாஜ்பேயி என்கின்ற முகமூடியை அணிவித்து பா.ஜ.க.வை மக்கள் உள்ளத்தில் பதிய வைக்க - அறிமுகப்படுத்த எண்ணுகிறார்கள். வாஜ்பேயி மாத்திரம் அல்ல. அத்வானியும் அந்தக் கட்சிக்கு இன்னொரு முகமூடிதான் - நாகரிகமான முகமூடி.

## காட்டுமிராண்டிக் கும்பல்

அந்த முகமூடியை அகற்றிவிட்டுப் பார்த்தால் அங்கே என்ன தெரியும் தெரியுமா? ஆர்.எஸ்.எஸ். என்ற காட்டுமிராண்டித்தனமான - வன்முறைக் கும்பல் அங்கே தெரியும். அந்த முகமூடியை விலக்கிவிட்டுப் பார்த்தால் இந்து முன்னணி என்கிற வக்கிரமமான வன்முறைக் கும்பல் அங்கே தெரியும்.

அந்த முகமூடிகளை விலக்கி விட்டுப் பார்த்தால் பஜ்ரங்தளம் என்கிற பயங்கரவாதிகள் கூட்டத்தின் உருவம் தெரியும். விஸ்வ இந்து பரிசத் என்கிற வன்முறையாளர்களின் கூட்டம் அங்கே தெரியும்'' என்று கலைஞர் பேசியிருக்கின்றார்.

அவர் ஒரு முகமூடியை சொன்னார். இவர் ஒரு முகமூடியை சொல்லுகின்றார். ஏனென்றால், போலீஸ்துறை அமைச்சராயிற்றே; முகமூடிகளை எல்லாம் கண்டுபிடித்தாக வேண்டும். இவ்வளவும் கலைஞர் அவர்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே பேசியது.

## காட்டுமிராண்டியாகத் தெரியவில்லை

இப்பொழுது ஏன் அந்த முகமூடி தெரியவில்லை. ஏன் அந்தக் காட்டுமிராண்டிகளைத் தெரியவில்லை. இதைக் கேட்பதற்கு நாங்கள் உரிமை பெற்றவர்கள் அல்லவா? ஆகவே நீங்கள் வரலாற்றுப் பிழை செய்து விட்டீர்கள் என்றுதானே நாங்கள் சொல்லுகின்றோம்.

ஏற்கனவே கூட்டு சேர்ந்தவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். உங்களுக்கு முகமூடியர்களோடு என்ன கூட்டு? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர் முருகன் அவர்கள் சொன்னார். உமாபாரதியைப்பற்றி சொன்னார். என்னவென்றால், கணவன் பெயரை மனைவி சொல்லலாம். 'பதி பக்தி' கொஞ்ச காலத்திற்கு முன்பு பதிபக்தி என்று ஒரு சினிமா படம் வந்திருக்கின்றது. அந்த மாதிரி அரசியலிலும் இப்பொழுது பதி பக்தி வந்திருக்கிறது.

## இல.கணேசய்யர் சொல்கிறார்

இல. கணேசய்யர் சொல்லுகிறார் - தி.மு.க. பி.ஜே.பி. கூட்டணி என்பது கலப்புத் திருமணம் என்று சொல்லுகின்றார். பெரியார் அவர்கள் முன்பு யாராவது கலப்புத் திருமணம் செய்து கொண்டோம் என்று சொன்னால், என்னப்பா - கலப்புத் திருமணம்? ஆணும், பெண்ணும் தான் திருமணம் பண்ணிக் கொள்கின்றார்கள். இதைப் போய் எப்படி கலப்புத் திருமணம் என்று சொல்லுகின்றீர்கள்? மாட்டிற்கும், மனிதனுக்கும் திருமணம் நடந்தால்தான் கலப்புத் திருமணம் என்று சொல்லலாம். மனிதனுக்கும், மனிதனுக்கும்தானே நடக்கின்றது என்று தத்துவ ரீதியாக சொல்லுவார்.

## திரிபுவாதம் வந்துவிட்டது

அண்ணா கொள்கைக்கே இப்பொழுது திரிபுவாதம் வந்துவிட்டது. இரண்டு வெவ்வேறு தொழில்களில் இருப்பவர்கள் திருமணம் செய்தாலும் கலப்புத் திருமணம்தான். நம்மவர் மணவிழா மேடையில் கேட்டுக் கொண்டே ஆதரிக்கின்றார். இரண்டு வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும் அது கலப்புத் திருமணம் தான். அவர் சொல்லுகிறார் - இரு வேறு ஜாதிகளுக்குள் மட்டும் நடைபெறுகிற திருமணம் கலப்புத் திருமணம் மட்டுமல்ல என்று.. இது புது தத்துவம் பாருங்கள்.

இந்தக் கொள்கை கொஞ்சம், கொஞ்சமாக எப்படி சறுக்கிக் கொண்டு, வழுக்கிக் கொண்டு திரிபுவாதங்களுக்கு உள்ளாகியிருக்கிறது பாருங்கள். நமது சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கின்றார்.

அடுத்து கணேச அய்யர் சொல்லுகின்றார். ''இரு வேறு தொழில்களை யும், இருவேறு பழக்க வழக்கங்களையும், இரு வேறு கொள்கைகளை யும் கொண்ட குடும்பத்தினிடையே நடக்கும் திருமணமும் கலப்புத் திருமணம்தான். இவ்வளவு நாட்களாக எந்தக் கொள்கையை நாம் கட்டிக் காத்தோமோ அதற்கு ஒரு வழுக்கல், சறுக்கல், திரிபுவாதம் வந்துவிட்டது.

## தோற்றமளிக்கும்

அதைவிட இன்னொன்றையும் சொல்லுகின்றார். 'இரு வேறு கொள் கைகளைக் கொண்டதுபோல தோற்றமளிக்கும் தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்குமிடையே முதல்வர் கருணாநிதி கலப்புத் திருமணத்தை நடத்தி வைக்கின்றார்.' இப்படிச் சொல்வதை நீங்கள் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். ''இரு வேறு கொள்கைகளைக் கொண்டதைப் போல தோற்றமளிக்கும்'' என்று சொல்கிறார். எவ்வளவு பெரிய ஆபத்து? எப்படி உள்ளே புகுந்துவிட்டார்கள் பாருங்கள். ஆரிய மாயை எவ்வளவு அழகாக உள்ளே புகுந்துவிட்டது. பாருங்கள்.

## புதிய கொள்கை விளக்கம்

பா.ஜ.க. பொதுச் செயலாளர் இல. கணேசன் சொல்கிறார்.

''தி.மு.க. கொள்கையும், பா.ஜ.க. கொள்கையும் இருவேறு கொள் கைகளைப் போலத் தோற்றமளிக்கும். ஆனால், உண்மையில் அப்ப டிக் கிடையாது. இரண்டும் ஒரே கொள்கைதான்'' என்ன அற்புதமான கொள்கை விளக்கம் - பாருங்கள் (கைதட்டல்). இன்னும் அடுத்து அவரையே கொள்கை பரப்புச் செயலாளராக போட்டுவிடலாம். இவர் களே அந்தக் கட்சிக்குக் கொள்கை பரப்புச் செயலாளராகப் போகலாம். இது நியாயந்தானா? இதற்குப் பெயர் கலப்புத் திருமணமா? இல் லைங்க. நன்றாக நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். கலப்பு என்பது இயற்கையாக உள்ளது. கலந்தால் அது கலப்பு. செயற்கையாக அது கலந்தால் அது கலப்படம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. கலப்படம் என்பது குற்றச்செயல். அதற்குத் தண்டனையுண்டு. இப் பொழுது நடந்துகொண்டிருப்பது அரசியல் கலப்புத் திருமணமல்ல, அரசியல் கலப்படம். அந்தக் குற்றத்திற்கு மக்கள் தண்டனை வழங்கு வார்கள். சாதாரணமானதல்ல. இதை நாம் சொன்னால் ரொம்ப ஆத்திரப் படுகிறார்கள்.

## வரலாற்று ரீதியான குற்றம்

இன்று காலை வந்த செய்தித்தாள்களில் ஒரு செய்தி வந்திருக்கிறது. கலைஞர் சொல்கின்றார் - சமத்துவபுரங்களைத் திறப்பதற்காக இப் போது நிறைய இடங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகின்றார். ஏனென்றால், மக்களுக்கு இப்பொழுது பெரியார் பெயரைக் காட்ட வேண்டும். நான் எதையும் கடுமையாகக்கூட சொல்லவில்லை. மதுரை விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்கிறார்கள்:

செய்தியாளர்: இரண்டு நாட்களுக்கு முன் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி கொடுத்த அறிக்கையில்; தி.மு.க., பா.ஜ.க.வோடு

உடன்பாடுகொண்டிருப்பது வரலாற்று ரீதியான குற்றம் - தவறு என்றும், நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறியதோடு, தொடர்ந்து தி.மு.க.வைக் குறை கூறித் தாக்கிப் பேசுவதைப் பற்றி...? என்று கேள்வி கேட்கின்றார்.

எங்களுக்கு உரிமை இல்லையா கேட்பதற்கு? இல்லை இல்லை இன்னின்ன காரணத்திற்காக இந்தக் கூட்டு நியாயமானது. இன்னின்ன காரணத்திற்காக இந்தக் கூட்டு எங்களுக்குத் தேவைப்பட்டது. இது வரலாற்றுத் தவறு அல்ல. இதுதான் வரலாற்றில் மிகப் பெரிய சாதனை. இந்த மாதிரி விளக்கிச் சொன்னால் என்னுடைய நிலையிலிருந்து நான் மாற்றிக் கொள்கின்றேன்.

## பட்டுக்கோட்டைக்கு வழி என்ன என்றால்...

அதைவிட்டுவிட்டு கேட்ட கேள்வி "பட்டுக்கோட்டைக்கு வழி எப்படி? என்று. திராவிட முன்னேற்றக் கழகம் கொட்டைப் பாக்கு விலை என்ன?" என்று சொன்னால் அது நியாயம்தானா? தயவு செய்து இதை நினைத்துப் பார்க்க வேண்டும். கலைஞர் அவர்கள் எல்லா வகையிலும் புத்திசாலி. அதில் ஒன்றும் நான் குறைத்து மதிப்பிட மாட்டேன். ஆனால், எவ்வளவு பெரிய புத்திசாலியாக இருந்தாலும் ஆரம்பத்தில் அடிப்படையில் கூட்டும் பொழுது தவறாகக் கூட்டிவிட்டால் பெரிய கூட்டலாக அது இருந்தாலும் அந்தத் தவறு வந்துகொண்டிருக்கும். அது அவருடைய தவறல்ல. ஆரம்பத்தில் கூட்டலில் ஏற்பட்ட தவறு. அதே மாதிரிதான் இப்பொழுது தவறு நடந்துகொண்டிருக்கின்றது. காரணம், இது வரையிலே பார்த்த பார்வை பொதுப் பார்வை.

## தன் பெண்டு -தன் பிள்ளை - பார்வை

இப்பொழுது பார்ப்பது வேறு பார்வை. தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்பதைப்பற்றி இந்த மண்ணிலே பிறந்த புரட்சிக்கவிஞர் பாடினாரே - அதை நினைவுப்படுத்திக்கொள்ளுங்கள். சின்னதோர் கடுகு உள்ளம். அந்த கடுகு உள்ளம் இருக்கலாமா? அதுவும் தொல்லுலக மக்கள் எல்லாம் என் மக்கள் என்கிற தாயுள்ளம் - பெரிய பேருள்ளம் நமக்கு இருக்க வேண்டாமா? கடுகு உள்ளத்திலிருந்து பெரிய உள்ளத்திற்கு புரமோசன் வாங்கிச் செல்ல வேண்டும். அங்கிருந்து இங்கு வரக்கூடாது. ரிவர்ஸ் - கீர் போடுவது மாதிரி இது.

## நான் பாடுபடவில்லையாம்!

இதற்குக் கலைஞர் என்ன பதில் சொல்லுகிறார் தெரியுமா? அவருடைய பதில் இதுதான்: "முஸ்லிம்களுக்காகவும், கிறித்துவர்களுக்காகவும் வாதாடுவதற்காக அவர்களுக்கு அவர் பாதுகாப்பாக பேசுவதாகவும் அவர் சொல்லிக் கொள்ளுகிறார்" (யார்? வீரமணி) இந்தக் கேள்விக்கு இதுதான் பதிலா? அதுவும் நான் பாடுபடவில்லை. மேலும் சொல்கிறார்: "சும்மா சொல்லிக்கொள்ளுகிறார். ஆனால் இதுவரை இந்து மதத்தையும், இந்துக் கடவுள்களையும் மாத்திரம் தாக்கிக் கொண்டிருந்ததற்கு மாறாக சமீபத்தில் 6-ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற

மாநாட்டில் வைக்கப்பட்டிருந்த திராவிடர் கழக விளம்பரங்களில், கிறித்துவ மதத்தையும், இஸ்லாமிய மதத்தையும் மிகக் கேவலமாக விமர்சித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை போலீசார் அகற்றியதைக் கண்டித்து, அவர்களுடைய 'விடுதலை' பத்திரிகையில் எழுதினார்'' என்று சொல்லிவிட்டு நான்கைந்து போட்டோக்களை எடுத்துக் கொண்டு சென்று காட்டியிருக்கிறார்.

## க.சு. பிள்ளை எழுதியிருக்கிறாரே!

ஆனால், நண்பர்களே, உண்மையில் என்ன நடந்ததென்றால், சேலத்தில் மதவாதக் கண்டன மாநாடு 12-ஆம் தேதி நடந்தது. எல்லாத் தோழர்களும், எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்துகொண்டார்கள். அதற்காக முதலில் விளம்பரம் எழுதி வைத்தார்கள். விளம்பரத்தில் முன்னூறு தட்டிகள் எழுதி வைத்திருந்தார்கள். அதில் ஒரு தட்டியிலோ, அல்லது இரண்டு தட்டிகளிலோ ''இந்து என்றால் திருடன்'' என்று எழுதியிருந்தது என்கிறார்கள். ஏற்கனவே இப்படி எழுதியிருக்கிறார்கள். க. சுப்பிரமணியபிள்ளை எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட ஆதாரங்களை எடுத்து எழுதியிருக்கின்றார்கள்.

## ஆர்வக் கோளாறு

இந்த மாதிரி ஒன்று, இரண்டு எழுதியிருக்கின்றார்கள். அப்படி எழுதுவது பகுத்தறிவு பிரச்சாரம். அதை இளைஞர்கள் வேகமாக ஆர்வத்தோடு எழுதியிருக்கின்றார்கள். எந்தக் கட்சியிலும் இளைஞர்கள் அப்படி தீவிரமாக இருப்பார்கள்.

அதேமாதிரி செல்வி ஜெயலலிதா அவர்களை மேரித் தாயாக போஸ்டர் அடித்தார்கள் என்று கலைஞர் சொன்னார். யாரோ ஒரு தோழர் ஆர்வக் கோளாறால் அவர் சொந்தமாக அந்த மாதிரி போஸ்ட்டரை அடித்துவிட்டார். அதை ஜெயலலிதா அம்மையார் அவர்கள் கண்டித்தார்கள். அதைத் தவறு என்று சொன்னார்கள். அதற்கு வருத்தம் தெரிவித்தார்கள். அது முடிந்து போய்விட்டது. அது மாதிரி எனக்கு இதைக் கண்டு பிடித்து சொல்லியிருக்கின்றார்.

## இராம. கோபாலன் வேலை

வீரமணி இந்து மதத்தைத் தாக்குகிறார். இப்பொழுது மற்ற மதத்தினரையும் தாக்குகிறார் என்று கலைஞர் சொல்லுகின்றார். இராம. கோபாலன் என்ன வேலை செய்கிறாரோ - அவருக்கு கலைஞர் இரவல் குரல் கொடுக்கிற மாதிரி ஆயிட்டாரே என்பதுதான் எங்களுக்கு வருத்தம்.

1971-லே இதே மாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றது. தேர்தலுக்கு முன்னாலே தந்தை பெரியார் சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு நடத்தினார். அந்த மாநாட்டில் கலந்துகொள்ள யாரையும் தந்தை பெரியார் அவர்கள் அழைக்கவில்லை. அப்பொழுது திராவிடர் கழகத்தின் சார்பில் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## அன்றைக்கு ஜன சங்கம்

இதே பி.ஜே.பி.க்காரர்கள் அன்றைக்கு ஜனசங்கம் என்ற பெயரில் இருந்தார்கள். சேலத்தில் தந்தை பெரியார் அவர்களுக்கு கறுப்புக்

கொடி காட்டுவோம் என்று ஜனசங்கத்துக்காரர்கள் அறிவித்தார்கள். அவர்கள் ஒழுங்காக கறுப்புக்கொடி காட்டிவிட்டு போகலாம்.

## பெரியார் ஊர்வலத்தில் வருகிறார்

தந்தை பெரியார் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் வருகிறார். கலைஞர் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலே தந்தை பெரியார் அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்ட ஜனசங்கத்தினருக்கு காவல்துறை மூலமாக ஒரு இடம் ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஜனநாயகத்தை முதல்வர் காப்பாற்றுகின்றார்!

திராவிடர் கழகம் நடத்திய ஊர்வலத்தில் கழகத் தோழர்கள் ஒலி முழுக்கமிட்டு சொல்கிறார்கள். ஜனசங்கத்துக்காரர்கள் பெரியாருக்குக் கறுப்புக்கொடி காட்டுகின்றோம் என்று பெரியாரை எதிர்த்து முழக்கம் போட்டார்கள். பெரியார் அவர்கள் அமைதியாக இருந்தார். ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது.

## பெரியார் மீது செருப்பு வீசிய ஜனசங்கத்தினர்

கறுப்புக்கொடி காட்ட நின்ற ஜனசங்கத்துக்காரர்களில் ஒருவர் தந்தை பெரியார் மீது செருப்பைத் தூக்கிப் போட்டான். எதற்காக? பெரியார் அவர்கள்மீது விழ வேண்டும் என்பதற்காகப் போட்டான்.

ஆனால், அந்தச் செருப்பு அய்யா அவர்கள் மீது விழவில்லை. ஊர்வலத்தில் அய்யா அவர்களுடன் நடந்துவந்த நமது கறுப்புச் சட்டைத் தோழர்மீது விழுந்தது. விழுந்த செருப்பை ஒரு திராவிடர் கழகத் தோழர் எடுத்தார். அந்தச் செருப்பை எடுத்த தோழர் ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்ட இராமன் படத்தை ஓங்கி அடித்தார்.

## உன் கடவுளுக்கும் அடி

எங்களுடைய தலைவர் மீதா செறுப்பு வீசினீர்கள்? உங்களுடைய கடவுள்மீதே செருப்பை எடுத்து அடிக்கிறேன் என்று அவர் அடித்தார். இது சாதாரண நிகழ்ச்சி. அவருக்கு ஆத்திரம் வந்தது - அடித்தார்.

## காமராஜருக்கும் - ராஜாஜிக்கும் விசித்திர கூட்டு

அப்பொழுது தேர்தல் நேரம், தி.மு.க. மீது ஊழல், இலஞ்சம் என்று பிரச்சாரம் நடந்துகொண்டிருந்த நேரம். 1971-லே இந்திராகாந்தியோடு தி.மு.க. அப்பொழுதுதான் கூட்டு சேர்ந்திருக்கிறது. ராஜமான்யம் ஒழிப்பு, வங்கிகள் தேசிய மயம் என்பவைகள் எல்லாம் நடைபெற்றன. அந்த நேரத்திலே காங்கிரஸ் சின்டிகேட், இண்டிகேட் என்று பிரிந்தது. காமராஜர் காங்கிரசிலிருந்து பிரிந்து சிண்டிகேட் என்ற அமைப்பை உருவாக்கினார்.

அப்பொழுது ராஜகோபாலாச்சாரியாருக்கும் காமராஜருக்கும் விசித்திரமான கூட்டு அந்த நேரத்திலே தி.மு.க.வும் இன்டிகேட் என்று சொல்லக் கூடிய இந்திரா காங்கிரசும் இவர்கள் ஒரு கூட்டு. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு காரியம் பண்ணினார்கள்.

## பலே பலே செய்யுங்கள் கலைஞர்

துக்ளக் பத்திரிக்கையில் ஒரு பெரிய அட்டைப்படம் போட்டார்கள். பெரியார் கையில் ஒரு செருப்பு. அந்த பக்கம் இராமர் படம். பெரியார் ஓங்கி இராமர் படத்தை அடிக்கின்றார். பக்கத்தில் கலைஞர் கருணாநிதி ஒரு துண்டை மேலே போட்டுக் கொண்டு நிற்கிற மாதிரி ஒரு படத்தைப்போட்டு - பலே பலே செய்யுங்கள் என்று ஒரு படம் போட்டிருந்தார்கள்.

அதற்குக் கீழே என்ன வாசகம் எழுதப்பட்டிருந்தது என்றால், பலே, பலே இராமனை செருப்பால் அடிப்பவர்களுக்கா உங்களுடைய ஓட்டு? என்று செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

## தி.மு.க.வுக்கும் தி.க. ஊர்வலத்திற்கும் சம்பந்தமில்லை

உடனே தந்தை பெரியார் அவர்கள் பேசினார். நாங்களும் 'விடுதலை'யில் எழுதினோம். இராமன் எந்த தேர்தலில் நின்றான் என்று கேட்டோம். அவனை ஏன் நாங்கள் அடிக்க வேண்டும்? (சிரிப்பு - கைதட்டல்). தேர்தலுக்கும், இராமனுக்கும் என்ன சம்பந்தம் என்று நாங்கள்தான் பிரச்சாரம் செய்தோம்.

## கோயில் கதவு அளவுக்குப் போஸ்டர்

பெரியார் இராமனை செருப்பால் அடிக்கிற மாதிரியான போஸ்டரை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் எங்கே பார்த்தாலும் ஒட்டினார்கள். அதுவும் பெரிய கோயில் கதவு அளவுக்குப் போஸ்டர். இதில் தி.மு.க.வுக்கே சம்பந்தம் கிடையாது. திராவிடர் கழகம்தான் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தை நடத்தியது. அரசியலுக்கும், திராவிடர் கழகம் நடத்திய ஊர்வலத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தின் ஒரு பகுதி. அதைக்கூட ஆத்திரப்பட்டு அவர்கள் செய்துவிட்டார்கள். இந்த செய்தியை இந்தியா முழுக்கப் பரப்பிவிட்டார்கள். இதை வைத்து எங்கே பார்த்தாலும் கேள்வி கேட்டார்கள்.

## கலைஞர் தாய்க் கழகத்தின்மீது குற்றம் சுமத்தலாமா?

அது மாதிரி - இது ஒரு சாதாரண நிகழ்ச்சி. அதை முதல்வர் கலைஞர் எடுத்து வைத்துக் கொண்டு செய்தியாளர்களிடம் காட்டுகின்றார். பார்ப்பனர்கள் அன்றைக்கு எதை செய்தார்களோ அதே சேலம் சம்பவத்தைக் கையில் எடுத்துக்கொண்டு திராவிடர் கழகமாகிய தாய்க் கழகத்தின் மீது குற்றம் சொல்லுகின்றார். சிறுபான்மை சமுதாயத்தினரிடம் இருந்து எங்களைப் பிரிக்கிறாராம். சிறுபான்மை சமுதாயத்தினருக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறாராம். இவர்களா உங்களுக்குப் பாதுகாவலர்? என்று கலைஞர் சொல்கிறாராம்.

## நாங்கள் ஏன் 'மிசா'வில் அடி வாங்க வேண்டும்?

திராவிடர் கழகம் என்பது தாய்க் கழகமாயிற்றே. தி.மு.க., பா.ஜ.க. வோடு கூட்டு சேர்ந்திருப்பதை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று

சொல்லுவதற்கு உரிமை இல்லையா? உங்களோடு நாங்கள் எல்லாவற்றிலும் பங்கெடுத்துக்கொண்டோமே. ஊழலைப் பற்றி பேசினீர்கள்.

நீங்கள் செய்த தவறுக்காக நாங்கள் மிசாவில் அடி வாங்கினோமே! (சிரிப்பு). எங்களுக்குத் துணையாக இருந்தவர்கள்தானே சி.பி.எம். தோழர்கள். மறைந்த நண்பர் அரிபட் - எங்களோடு நெருக்கமாக இருந்தார். நாங்கள் எதற்கு சென்னைச் சிறைச்சாலையில் அடி வாங்கினோம்? தயவு செய்து நினைத்துப் பாருங்கள்.

## இந்திராகாந்தியோடு கூட்டு

இதன்மூலமாக இந்தக் கூட்டணிக்கு ஓட்டுக் குறையாதா என்று கலைஞர் பார்க்கிறார். நாங்கள் இந்தக் கூட்டணியிலேயே இல்லாதவர்களய்யா. நாங்கள் இப்பொழுது கூட்டணி பிரச்சாரமே பண்ணவில்லையே. தற்பொழுது உங்களுக்குப் புத்தி வருவதற்காகத்தானே நாங்கள் பிரச்சாரம் பண்ணுகிறோம் (கைதட்டல்). வேறு எதற்காக நாங்கள் பிரச்சாரம் பண்ணுகிறோம்? கொள்கையை இழந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தானே நாங்கள் சொல்லுகிறோம். இதிலே இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், இளைஞர்கள் ரொம்பபேருக்கு தெரியாது. ஆனால், வயதானவர்களுக்குத் தெரியும். இது பழைய கதை. இந்திராகாந்தியோடு கூட்டு சேர்ந்திருந்தார்கள். பஞ்சாபில் ஜலந்தரிலே இந்திராகாந்தி அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திலே பேசிக் கொண்டு வருகிறார்.

## இந்திராகாந்தியிடம் ஒரு செய்தியாளர் கேட்கிறார்

அப்பொழுது ஒரு செய்தியாளர் போய் கேட்கிறார். அந்த செய்தியாளர் நம்மூர்க்காரர். ஏனென்றால், நம்ம ஆட்கள்தானே காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் எல்லாம் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தவர்கள். அந்தச் செய்தியாளர் கேள்வி கேட்கிறார். "நீங்கள் தமிழ்நாட்டில் 1971-இல் தி.மு.க.வோடுதானே கூட்டுச் சேர்ந்திருக்கிறீர்கள் என்றார். அதற்கு "ஆமாம், இதிலே என்ன இருக்கிறது" என்றார் இந்திராகாந்தி அம்மையார். உடனே அந்த செய்தியாளர் கேட்கிறார், "அங்கே இராமரைச் செருப்பாலே அடித்திருக்கிறார்களே?" ஏனென்றால் வட நாட்டிலே இராமனைத்தான் கடவுளாகக் கும்பிடுகிறார்கள். அந்த ஒரு கடவுள்தான் அங்கே. அந்த வட நாட்டினரின் ஓட்டைக் கெடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கேட்கின்றார். இராமனை அப்படி செருப்பாலே அடித்துவிட்டார்களே?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

## பிரதமர் திருப்பிக் கேட்டார்

உடனே பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் திருப்பிக் கேட்டார்கள்: "யார் அதைச் செய்தது" என்று? திராவிடர் கழகம் - பெரியார் என்று செய்தியாளர் பதில் சொன்னார். உடனே அந்த அம்மையார் - நீங்கள் ராமசாமி நாயக்கரைச் சொல்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு செய்தியாளர் ஆமாம் என்றார்.

## அதே பதிலை நான் சொல்லவேண்டுமா?

அவர் இதை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தே அந்த வேலையைத்தான் செய்துவருகிறார் (சிரிப்பு, கைதட்டல்) என்று அந்தம்மா பதில் சொல்லுகிறார். அதே பதிலை நான் கலைஞருக்குச் சொல்ல வேண்டுமா? (சிரிப்பு). தயவு செய்து நீங்கள் சிந்திக்க வேண்டாமா? அதற்கப்புறம் என்ன ஆனதென்றால், தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் எல்லோரும் பயந்துகொண்டிருந்தார்கள் - கலைஞர் உட்பட.

## கலைஞர் கேட்டார்...

என்னையே பார்த்து முதல்வர் கலைஞர் கேட்டார் - என்னையா இந்த எலக்சனில் எங்களை வரவிடாமல் கெடுத்துவிட்டீர்களே என்று. கெடுக்கவில்லைங்க. அதன் விளைவு எப்படி இருக்கும் பாருங்கள் என்று சொன்னோம்.

## காமராஜருக்கு வைத்த பொட்டு

இரண்டில் ஒன்று தெரிந்துபோய்விட்டது - ஆச்சாரியார், காமராஜர் இருவரும் ஒரே அணி. காமராஜருக்கு ஆச்சாரியார் நெற்றியிலே பொட்டுவைத்தார். அதாவது கலைஞர் வாஜ்பேயியிடம் சேர்ந்தமாதிரி (சிரிப்பு, கைதட்டல்). அரசியலில் அது சகஜம். இதை எல்லாம் மறக்காமல் நினைவுபடுத்துகிறோம். நாங்கள் அன்றைக்கே எழுதி னோம்.

## என்று தணியும் அடிமையின் மோகம்

ஆச்சாரியார் காமராஜர் நெற்றியில் பொட்டு வைக்கிற படத்தைப் போட்டு - என்று தணியும் இந்த அடிமையின் மோகம் என்று 'விடுதலை'யில் எழுதினோம். எங்களைவிடக் காமராசரைப் பாராட்டிய வர் யாரும் கிடையாது. இன்னமும் பாராட்டத் தவறுவதில்லை.

## காமராஜர் செய்த பெரும் தவறு

ஆனால், காமராஜரின் பொது வாழ்க்கையில் அவர் ஒரு பெரிய அரசியல் தவறைச் செய்தார் என்றால், வரலாற்றுத் தவறு செய்தாரென் றால் அவருடைய அரசியல் எதிரியான இராஜகோபாலாச்சாரியாரிடம் பொட்டு வைத்துக் கொண்டதுதான். காமராஜர் - இராஜகோபாலாச்சாரி யாரிடம் கூட்டுச் சேர்ந்தாரே அதுதான். அதை எல்லா அரசியல் நோக்கர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

## அதே தவறை கலைஞர் செய்கிறார்

அதே தவறைத்தான் வாஜ்பேயி அவர்களுடன் சேர்ந்து கலைஞர் அவர்கள் இன்றைக்கு செய்திருக்கிறார். அன்றைக்கு நாங்கள் அதைப் பிரச்சாரம் பண்ணினோம். உடனே என்ன ஆயிற்று என்றால், இராம னைச் செருப்பால் அடிப்பதற்கு முன்னாலே நூற்றி முப்பத்து நான்கு தான் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை. அதற்குப் பின்னர் நடந்த தேர்தலில் வாக்கு எண்ணிக்கைக்குப் பெட்டியைத் திறக்கும்பொ

ழுதே தி.மு.க. தோற்க வேண்டும் - தோற்றுவிடும் என்றெல்லாம் 'தினமணி'யின் ஆசிரியர் சிவராமன் எழுதினார். ஆனால், என்ன நடந்ததென்றால் சேலம் நிகழ்ச்சி நடந்த நேரத்தில் சேலத்திலேயே இரண்டு இராமன்கள் நின்றார்கள்.

## இரண்டு இராமன்கள்

எந்த இராமனுக்கு சேலத்தில் அடி விழுந்ததோ அந்த சேலத்திலேயே இரண்டு இராமன்கள். ஒன்று - ஜெயராமன்; இன்னொருவர் - இராசா ராம். இப்பொழுது அவர் சங்கராச்சாரி மடத்தின் முகவரியில் இருக்கி றார். சேலம் தொகுதி ஒன்று. சேலம் தொகுதி இரண்டு. அவர்கள் இருவருமே வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்றவர்கள் நூற்று எண்பத்து நான்கு. வட நாட்டினர் பார்த்தனர் - அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'பிலிட்ஸ்' என்று ஒரு பத்திரிகை. மும்பையிலிருந்து வருகிறது. அந்தப் பத்திரிக்கைகாரர் எழுதினார். இராமனை செருப்பால் அடித்ததைத் தேர்தல் பிரச்சாரமாக தமிழ்நாட்டிலே செய்தார்கள். வட நாடாக இருந்தால் முடிவு வேறாக இருந்திருக்கும். அங்கே பார்த்தீர்க ளேயானால் மிகப்பெரிய அளவிற்கு அவர்களுக்கு வெற்றி கிடைத்தி ருக்கிறது.

## இராமனை செருப்பால் அடித்ததால் வெற்றி

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவ ரையில் இராமனைச் செருப்பால் அடித்துவிட்டுத் தேர்தலில் நின்றால் கூடுதலாகச் சீட் கிடைக்கும் என்பது தெரிகிறது என்று அந்தப் பத்திரி கையில் எழுதினார்கள். இதை நாங்கள் சொல்லவில்லை - 'பிலிட்ஸ்' பத்திரிகையின் கருத்து. அதனாலே சாதாரணமாக வெள்ளத்திலே போகின்றவனுக்கு துரும்பு கிடைத்தால்கூட அதை துடுப்பாக நினைப் பான் என்பது மாதிரி - கலைஞர் நிலை எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது பார்த்தீர்களா?

## சாதாரண பிரச்சாரம் இது

இந்தப் பிரச்சாரத்தை நாங்கள் சாதாரணமாக எப்பொழுதுமே செய்வ துதானே? நான்தான் தெளிவாகச் சொன்னேனே. மக்கள் நல உரிமைக் கழகத் தோழர் கூடக் கேட்டார். நான் இங்கே வரலாமா? கடவுள் நம்பிக்கையாளனாயிற்றே என்று கேட்டார். பண்ருட்டியார்தான் அவரை அழைத்து வந்தார். இங்கு வந்து நாங்கள் பேசுவதைக் கேட்காமல் இருந்திருந்தால் இவ்வளவு விசயங்கள் அவருக்குப் புரிந்தி ருக்குமா?

## அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக....

கோவிலுக்குப் போயிருந்தாரென்றால் புரிந்திருக்குமா? இருக்காதே. நாமெல்லாம் அர்ச்சகரானால் கோவில்கூட இருக்காதே. அவர் சொல்கி றார் - ஒரே கடவுள்தான் இருக்க வேண்டும் என்றால் மற்ற கடவுள்க ளையே வைக்க மாட்டார்களே. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று போராடுவதே அதற்காகத்தானே!

## உரிமைப் பிரச்சினை

எல்லோருக்கும் சேர்த்து அன்றையிலிருந்து போராடுகிறோம். கடவுள் நம்பிக்கை எங்களுக்கில்லை. ஆனால், நம்பி போகிறவருக்கு உரிமையிருக்க வேண்டும். அவருக்கு உரிமை மறுக்கப்படக்கூடாது என்பதற்காகத்தானே நாங்கள் போராடுகிறோம். எனவேதான் வர்ணாசிரம தர்மமும், குலதர்மமும் இந்த நாட்டில் கொடியேற்றப்படக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் எந்தக் காரணம் கொண்டு அவர்கள் செயலை நியாயப்படுத்துகிறீர்கள்? இங்கே பேசியவர்கள் கேட்டார்கள்-

## மாநில சுயாட்சிக்கும் பி.ஜே.பி.க்கும் சம்பந்தம் உண்டா

மாநில சுயாட்சிக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று புத்திசாலித்தனமாவது இந்த பி.ஜே.பி. அரசாங்கத்திற்கு இருக்கிறதா? முப்பத்து ஏழு மாதம் அரியானா விகாஸ் கட்சியும், பி.ஜே.பி.யும் கூட்டு சேர்ந்து இருந்தது. (தில்லியை அடுத்துள்ள மாநிலம் அரியானா) பன்சிலாலுக்கு எமர்ஜென்சி சம்பவங்கள் எல்லாம் மறக்க முடியாதவை. அரியானா விகாஸ் கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் முப்பத்தி அய்ந்து பேர். சட்டமன்றத்தினுடைய மொத்த எண்ணிக்கை தொண்ணூறு. பதினான்கு பேர் பி.ஜே.பி.யினர்.

## பி.ஜே.பி.யினர் கவிழ்த்தனர்

இந்த முப்பத்தைந்தும் பதினொன்றும் சேர்ந்து முப்பத்தேழு மாதமாக ஆட்சி நடத்திக்கொண்டு வந்தார்கள். திடீரென்று என்ன பண்ணினார் என்றால், கடந்த வாரத்திலே அரியானா விகாஸ் கட்சியை கவிழ்த்தார்கள். வாஜ்பேயிதான் நிலையான ஆட்சியைக் கொடுப்பவர். பி.ஜே.பி. என்றால் நிலையான ஆட்சிக்காகப் பாடுபடுபவர்கள் என்றுதானே சொல்கிறார்கள்?

## நிலையான ஆட்சியைத் தருபவர்களா?

ஏற்கனவே ஒழுங்காக நிலையான ஆட்சி அரியானாவில் நடந்து கொண்டிருந்தது - பி.ஜே.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து. அந்த ஆட்சிக்குக் கொடுத்த ஆதரவை பி.ஜே.பி.யினர் வாபஸ் வாங்குகிறோம் என்று கூறிவிட்டனர். ஏனென்று தெரியுங்களா? 'சவுதாலா' என்ற ஒருவர் அரியானாவில் இருக்கிறார். அவர் தேவிலாலின் மகன். அவர் அங்கே 'இந்தியன் நேஷனல் லோக்தள்' என்று ஒரு கட்சியை வைத்திருக்கிறார். அவரோடு இரகசியமாகப் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர். அவர் பன்சிலாலுக்கு எதிரி. அவருக்கு இருபத்தி இரண்டு எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள்.

## இருவகையான கூட்டு

இவர்களோடு வெளிப்படையாகக் கூட்டு - அவர்களோடு இரகசியமாகக் கூட்டு. எப்படியென்றால், அ.தி.மு.க.வோடு வாஜ்பேயிக்கு பதினெட்டு எம்.பி.க்களோடு வெளிப்படையாகக் கூட்டு. தி.மு.க

யோடு இரகசியமாகக் கூட்டு. அந்த ஊரிலும் இதே மாதிரிதான். நீங்கள் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன் - அவர்கள் என்ன பண்ணினார்கள் என்றால், இதை இரகசியமாகப் பேசிக் கொண்டு அவர் சொன்னார் - நாங்கள் இருபத்தி இரண்டுபேர் இருக்கிறோம் - நீங்கள் பதினோருபேர். மற்ற கட்சிகளிலிருந்தும் விலைக்கு வாங்கலாம்.

## காலை வாரிவிட நினைத்தனர்

பணம் நிறைய இருக்கிறது. அதனாலே அந்த ஆட்சியைக் கவிழ்த்து விடலாம். ஆட்சியைக் கவிழ்த்த பிறகுதான் உங்களுடன் கூட்டு என்றவுடனே, நீங்கள் கூட்டு வருவீர்களென்றால் கவிழ்ப்பதற்கு நாங்கள் தயார். எங்களுக்கு என்ன? என்று சொல்லி முப்பத்து ஏழு மாதமாக இவரை நம்பிக்கொண்டு இருந்தவரைக் காலை வாரிவிட்டார்கள்.

## காங்கிரசின் கெட்டிக்காரத்தனம்

அ.தி.மு.க.வினர் எப்படி ஏமாந்தார்களோ பிறகு எப்படிப் புரிந்து கொண்டார்களோ அதே மாதிரி பன்சிலாலும் புரிந்துகொண்டார். அவரை ஆட்சியைவிட்டே இறக்கவேண்டும் என்று முடிவெடுத்து இரண்டே நாள் அவகாசத்தில் செய்யவேண்டும் என்று நினைத்து 23.6.99 அன்று செய்தார்கள். ஓட்டெடுப்பு நடந்தது. இதிலே காங்கிரஸ் கட்சி ரொம்பப் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டது. ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக அரசியல் வியூகம் வகுத்தது. பாராட்டத்தகுந்த அளவிலே நடந்துகொண்டார்கள்.

## பி.ஜே.பி.கையில் இருந்த ஆட்சியும் பறிபோனது

என்ன பண்ணினார்கள் என்றால், பி.ஜே.பி.யை நல்ல சமயத்தில் மூக்கறுக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் பன்சிலாலின் முப்பத்தி அய்ந்து உறுப்பினர்களுடன் காங்கிரஸின் பன்னிரெண்டு உறுப்பினர்கள் மற்றவர்கள் எல்லாம் சேர்த்து அய்ம்பத்தி அய்ந்து பேரின் ஆதரவை பன்சிலால் பெற்றார். பி.ஜே.பி.யும் தனிமைப்படுத்தப்பட்டது. நேசனல் லோக் தளமும் தனிமைப்படுத்தப்பட்டது. இப்பொழுது பி.ஜே.பி. - கையில் இருந்த ஆட்சியையும் இழந்துவிட்டது. இது இராஜதந்திரத்துடனும், அரசியல் ரீதியாகவும் பி.ஜே.பி.யினர் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. லோக் தளத்தை சார்ந்த சவுதாலா இன்று (26.6.99) பிற்பகல் செய்தியாளர்கள் கூட்டத்தைக் கூட்டினார். அதிலே என்ன சொன்னாரென்றால் - நாங்கள் இனிமேல் யாரோடும் கூட்டு வைக்கப் போவதில்லை, பி.ஜே.பி. யோடும் கூட்டுக் கிடையாது. நாங்கள் இனிமேல் தனியாகத்தான் நிற்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டார். எனவே, நம்ம ஊரிலே சொல்லுவார்களே - யாரை நம்பி எதையோ இழந்தது மாதிரி... அது மாதிரி நடந்துவிட்டது.

## பறப்பதை நம்பி இருப்பதைவிட்டார்கள்

பறப்பதை நம்பிக்கொண்டு கையில் இருப்பதை விட்டுவிட்டார்கள். எவ்வளவு புத்திசாலிகள் - நிலையான ஆட்சியை இவர்கள் தருவார்களா? கலைஞர் சொல்லுகிறார் - நிலையான ஆட்சிக்காக நாங்கள் ஆதரிக்கிறோம் என்று. முன்னூற்றி அய்ம்பத்தாறு பற்றியும் காட்டிவிட்டார்கள். ஆகவே எதை நீங்கள் காரணம் சொல்லுகிறீர்களோ அதை ஏற்றுக்கொள்வதற்கு அங்கே இடமே கிடையாது. அதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

## கலைஞரால் முடியுமா?

கடைசியாக ஒன்றை உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது சென்ற தேர்தலிலே தி.மு.க. கொடுத்த தேர்தல் அறிக்கை. இந்தத் தேர்தல் அறிக்கையிலே பாபர் மசூதி இடித்தது பற்றி சொல்லுகின்றார். சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு நான் பாதுகாப்பாக இருப்பேன் என்று அடிக்கடி கலைஞர் சொல்லுகிறார். வேறொன்றும் வேண்டாமே - இரண்டு - மூன்று பாதுகாப்பு உறுதிகளை மட்டும் சொல்லட்டுமே. சிறுபான்மை சமுதாய மக்களுக்கு நம்பிக்கை வந்துவிடுமே. பாபர் மசூதியை இடித்த இடத்திலேயே மறுபடியும் மசூதியைக் கட்டித்தருவோம் என்று பி.ஜே.பி.க்காரர்களை இவராலே சொல்ல வைக்க முடியுமா? சிறுபான்மைச் சமுதாய மக்களுக்கு நம்பிக்கையூட்ட முடியுமா? இல்லை கிறித்தவ சமுதாய மக்களுக்கு எதிராக நடக்கக்கூடிய இந்தக் கொடுமைகள் எல்லாம் நடக்காமல் எல்லாவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்வதற்கு நாங்கள் உத்தரவாதம் கொடுக்கிறோம் என்று சொல்ல வைக்க முடியுமா? பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் உச்சநீதிமன்றத்திடம் கொடுத்த வாக்குறுதியையே காப்பாற்றவில்லையே?

## தி.மு.க. தேர்தல் அறிக்கை

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ''உத்தர பிரதேசத்திலே அப்போது ஆட்சி புரிந்த பா.ஜ.க.வின் வஞ்சகமும் துரோகமும்தான் அத்தகைய கோரத்திற்கும் பாபர் மசூதி இடிப்பிற்கும் காரணம்'' என்றெல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் சொல்கிறார்கள் - ''மதவெறியைத் தூண்டி (கலைஞர் அன்றைக்கு என்ன எழுதினாரோ அதைத்தான் இன்று உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்) பிற மதத்தினை அந்நியப்படுத்தவும், வருணாசிரம தர்மத்தைப் புதுப்பித்து வளர்க்கவும், பிற்போக்கு தேச விரோத சக்திகளை (அந்த பிற்போக்கு தேசவிரோத சக்திகள் என்பவை எவை என்று தெரியுங்களா? முழுக்க முழுக்க பி.ஜே.பி., பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். கும்பல்) அன்றும் இன்றும் என்றும் எதிர்த்து நிற்பதே பகுத்தறிவுப் பாதையில் உதித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## என்றும் என்றால் எனக்கு விளங்கவில்லை

அன்றும் சரி, இன்றும் சரி, 'என்றும்' என்றால் என்ன அர்த்தம்? எனக்குச் சரியாக விளங்கவில்லை (சிரிப்பு, கைதட்டல்). ஏனென்றால் அவர்கள்தான் தமிழாய்ந்தவர்கள். நான் தமிழ் ஆயாதவன். ஆகவே, அவர்கள் தமிழாய்ந்தவர்கள்தான் விளக்கம் சொல்ல வேண்டும். 'என்

றும்' என்றால் என்ன அர்த்தம்? எப்பொழுதும் மாற்றிக் கொள்ளலாம் என்பதா? இங்கே சகோதரர்கள் சொன்னபடி காலத்திற்கேற்ப, இன்னொரு வார்த்தையை அரசியல்வாதிகள் அடிக்கடி சொல்கிறார்கள். காலத்தின் கட்டாயம் (சிரிப்பு). இது என்ன காலத்தின் கட்டாயமோ தெரியவில்லை. மேலும் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது -

## மாபெரும் இலட்சிய துரோகம்

அவர்களோடு (பி.ஜே.பி.யோடு) வெட்கமின்றி கைகோர்த்து நிற்பவர்கள் பெரியார், அண்ணா, பெயரைச் சொல்லிக் கொள்ளவும் திராவிட இயக்கத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறிக் கொள்ளவும் கொஞ்சங்கூட அருகதையற்றவர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தந்தை பெரியாரின் பெயரால்; அறிஞர் அண்ணாவின் பெயரால் குற்றஞ்சாட்டுகிறது. மாபெரும் நமது இலட்சியத்திற்குத் துரோகம் செய்யும் அவர்களைத் தமிழ் மக்கள் சரியாக அடையாளம் கண்டு கொண்டு, உகந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்று திராவிட இயக்கத்தை உருவாக்கிய பெரியவர்களின் சார்பில் வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம் என்று (1998) -தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

## தி.மு.க. - பி.ஜே.பி.
## முக்காடுக்கும் - முகமூடிக்கும் கூட்டு

1998 தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அதாவது "வெட்கமின்றி கைகோர்த்துக் கொண்டு" என்று அ.தி.மு.க.வையும், பி.ஜே.பி.யையும் பார்த்து சொல்லுகின்றார். இப்பொழுது தி.மு.க.வும், பி.ஜே.பி.யும் கைகோர்த்துக் கொண்டிருப்பதற்கு ஒரே ஒரு வித்தியாசம்தான் உண்டு. அப்பொழுது அவர்கள் வெட்கமில்லாமல் - துணிந்து கைகோர்த்தார்கள். ஆனால், இப்பொழுது தி.மு.க.வும், பி.ஜே.பி.யும் வெட்கத்தோடு கைகோர்த்திருக்கின்றார்கள் (சிரிப்பு, கைதட்டல்). ஏனென்றால், தி.மு.க. பொதுக்குழுவிலேயே பி.ஜே.பி.யுடன் கூட்டு என்று பெயர் போடவில்லை பாருங்கள். முக்காடு போட்டுக் கொண்டு கூட்டு சேர்ந்துள்ளார்கள். பி.ஜே.பி.யினர் முகமூடி, தி.மு.க. முக்காடு. இப்பொழுது முக்காடிற்கும், முகமூடிக்கும் கூட்டு - இது நியாயம்தானா? தேவைதானா? அப்படி என்ன தி.மு.க.வினருக்கு அவசியம் வந்தது?

கொள்கையை விற்பதா? பதவி சுகம் அந்த அளவுக்கு ஆக்கிவிட்டதா? வருடத்திற்கு வருடம் தீபாவளி வருவது போல இப்பொழுது தேர்தலும் வர ஆரம்பித்துவிட்டதே. அப்படி இருக்கின்ற நிலையிலே ஏன் கவலைப்பட வேண்டும்?

"தமிழ் மக்கள் இவர்களை அடையாளம் கண்டு கொண்டு - உகந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டுமென்றும் திராவிட இயக்கத்தை உருவாக்கிய பெரியவர்களின் சார்பில் வணங்கி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்." என்று கலைஞர் அவர்கள் அந்தத்தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கின்றார்.

நாங்களும் இப்பொழுது தி.மு.க.வை வணங்கி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**வாசகர்கள் கவனத்திற்கு:**

அனுப்புநர்:

பெயர்:

முழு முகவரி:

அஞ்சல் குறியீடு எண்:

பெறுநர்:

நிலைமை நிலைய செயலாளர்.

திராவிடர் கழகம்,

பெரியார் திடல், சென்னை-600 007.

அன்புடையீர்,

" " என்ற தங்கள் வெளியீட்டைப் படித்தேன். உங்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறேன்.

தங்கள்

நாள்:

............................

(கையொப்பம்)

# நமது கருத்துப் பரவ உங்கள் உதவி தேவை

நமது கருத்துடன் ஒத்த கருத்துள்ள உங்கள் நண்பர் எவராவது உங்கள் பகுதியில் இருந்தால் அவர்களின் முகவரியை தயவுசெய்து கீழே உள்ள படிவத்தில் நிரப்பியனுப்பவும்.

| | |
|---|---|
| பெயர் ........................ | பெயர் ........................ |
| த/பெ ........................ | த/பெ. ........................ |
| முகவரி ........................ | முகவரி ........................ |
| வட்டம் ........................ | வட்டம் ........................ |
| மாவட்டம் ........................ | மாவட்டம் ........................ |
| அஞ்சல் குறியீடு எண் ........................ | அஞ்சல் குறியீடு எண் ........................ |
| பெயர் ........................ | பெயர் ........................ |
| த/பெ ........................ | த/பெ. ........................ |
| முகவரி ........................ | முகவரி ........................ |
| வட்டம் ........................ | வட்டம் ........................ |
| மாவட்டம் ........................ | மாவட்டம் ........................ |
| அஞ்சல் குறியீடு எண் ........................ | அஞ்சல் குறியீடு எண் ........................ |

குறிப்பு: எண்ணிக்கை அதிகமிருந்தால் தனிததாளில் மேற்கண்டபடி விவரங்களை அனுப்பலாம். அவர்கள் ஏற்கெனவே கழக உறுப்பினர்களாக இருந்தால் தேவை இல்லை.

....அடுத்த தேர்தலைப் பற்றி இருக்கின்ற கவலையைவிட அடுத்தத் தலைமுறையைப் பற்றிக் கவலைப்படக் கூடியவர்கள் திராவிடர் கழகத்திலே இருப்பவர்கள்.

ஹரேராம் என்று வீழ்ந்தார் காந்தி. கோட்சேவும் ராம் என்று சொல்லித்தான் சுட்டான். இரண்டு பேருக்குமே இராமன் மத்தியிலே இருந்தான். ...இராமனுக்கு காந்தியைக் காப்பாற்றுகின்ற சக்தி அன்றைக்கு இருந்திருந்தால் இன்றைக்கு நம்முடைய தேசம் பிழைத்திருக்கும். ஆர்.எஸ்.எஸ். வளர்ந்திருக்காது.

பாரசீக மொழியில் இந்து என்பதற்குப் பொருள் உண்டு. என்ன அந்தப் பொருள் என்றால், திருடன் என்று பொருள். இவர்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் அதைப் பெருமை என்று நினைத்து விட்டார்கள். இந்துத்துவா என்பதினுடைய தத்துவம் என்னவென்றால்... ஒரே மதம்தான் இந்த நாட்டிலே இருக்க வேண்டும். அதுதான் இந்து மதம். ...ஒரே மொழிதான் இந்த மக்களுக்கு இருக்க வேண்டும். அதுதான் சமஸ்கிருத மொழி. அதைத்தான் பரப்ப வேண்டும். வேறு எந்த மொழிக்கும் இங்கே இடமில்லை.

....அடுத்த தேர்தலைப் பற்றி இருக்கின்ற கவலையைவிட அடுத்தத் தலைமுறையைப் பற்றிக் கவலைப்படக் கூடியவர்கள் திராவிடர் கழகத்திலே இருப்பவர்கள்.

(பக். 13)

ஹரேராம் என்று வீழ்ந்தார் காந்தி. கோட்சேவும் ராம் என்று சொல்லித்தான் சுட்டான். இரண்டு பேருக்குமே இராமன் மத்தியிலே இருந்தான். ...இராமனுக்கு காந்தியைக் காப்பாற்றுகின்ற சக்தி அன்றைக்கு இருந்திருந்தால் இன்றைக்கு நம்முடைய தேசம் பிழைத்திருக்கும். ஆர்.எஸ்.எஸ். வளர்ந்திருக்காது.

(பக். 14)

பாரசீக மொழியில் இந்து என்பதற்குப் பொருள் உண்டு. என்ன அந்தப் பொருள் என்றால், திருடன் என்று பொருள். இவர்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் அதைப் பெருமை எட று நினைத்து விட்டார்கள். இந்துத்துவா என்பதினுடைய தத்துவம் என்னவென்றால்... ஒரே மதம்தான் இந்த நாட்டிலே இருக்க வேண்டும். அதுதான் இந்து மதம். ...ஒரே மொழிதான் இந்த மக்களுக்கு இருக்க வேண்டும். அதுதான் சமஸ்கிருத மொழி. அதைத்தான் பரப்ப வேண்டும். வேறு எந்த மொழிக்கும் இங்கே இடமில்லை.

(பக். 15)